Registered at the G. P. O. as a Newspaper ★ விலை சதம் 15

முக்கிய அறிவித்தல்
மில்க்வைற் நீல சோப்
தற்பொழுது
புதிய ரசாயனப் பொருட்கள்
சேர்க்கப்பட்டு
பெரிய சைஸ் கட்டியாக
தயாரிக்கப்படுகின்றது.
20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்.
கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.

ஈழநாடு
National Tamil Daily
மலர் 7 | விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 22, றஜப் 12. (7-11-65) ஞாயிற்றுக்கிழமை | இதழ் 268

துருப்புகளை விலக்க இணக்கம்

ஐ. நா.வின் புதிய தீர்மானம்; பாக். குக்கு ராஜீயத் தோல்வி?

"முதலில் பாக். துருப்புகள் வெளியேற வேண்டும்" — சாஸ்திரி

நியூயோர்க், நவ. 6

தத்தம் துருப்புகளை விலக்கிக்கொள்வதற்கு இந்தியாவும், பாகிஸ்தானும் இணக்கம் தெரிவித்திருப்பதாக நியூயோர்க்கிலிருந்துவெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

யுத்த நிறுத்தத்தை மீற வேண்டாமென்றும், துருப்புகளை விலக்கிக்கொள்ளுமாறும் பந்தாபஸ்துச் சபை நேற்றிரவு விடுந்த வேண்டுகோளை இந்தியாவும், பாகிஸ்தானும் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகள் எதிலும் இந்தியாவும் பாகிஸ்தானும் ஈடுபடக் கூடாதென்றும் ஆயுதம் தாங்கிய துருப்புகள், வீரர்கள் முற்ருக விலக்கப்பட வேண்டும் என்றும்ஐ.நா.பந்தோபஸ்து சபை அறிவித்திருக்கிறது.

நேற்றைய கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம் செப்டம்பர் மாதம் 20-ம் திகதி வெளியிடப்பட்ட தீர்மானத்தையே வலியுறுத்துவதாக சொல்லப்படுகிறது.

இதற்கிடையே ஐ.நா.பந்தோபஸ்து சபையின் புதிய தீர்மானம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட ராஜீயத் தோல்வி என்று ஐ.நா. பார்வையாளர்கள் கருத்துவெளியிட்டனர்.

நேற்று இந்திய பார்லிமெண்டில் பேசிய பிரதமர் சாஸ்திரி கைப்பற்றப்பட்ட இந்திய பகுதியிலிருந்து பாகிஸ்தான் தனது துருப்புகளை விலக்கினுல் இந்தியாவும் தனது துருப்புகளை விலக்குமென்றும் கூறினர்.

பல்கலைக்கழக

பாடத்திட்டத்தில் திடீர் மாற்றம்

வெளி மாணவர்கள் பாதிப்பு

வெள்ளவத்தை, சனி

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பகுதியினர், பொதுக் கலைத் தகுதித்தேர்வுக்கான இந்திய வரலாற்றுப் பாடத்தில் ஏற்படுத்தியுள்ள திடீர் மாற்றம் வெளி மாணவர்களைப் பாதித்துள்ளது.

இப்பாடத்திட்டத்தில் இந்தியாவின் ஆரம்பகால வரலாறு முதல் 1935-ம் ஆண்டு வரைப்பட்ட பகுதிக்குரிய வரலாறே இதுவரை காலமும் அடங்கியிருந்தது. ஆனல் அவர்களின் திடீர் மாற்றத்தின்படி 10-ம் நூற்ருண்டு முதல் 1935 வரைப்பட்ட காலப்பகுதி அடங்கியுள்ளது. இது பற்றிய அறிவிப்பு அப்பாடத்திற்குரிய விரிவுரையாளருக்கும் பல்கலைக் கழகம் ஆரம்பித்த பின்னரே அறிவிககப்பட்டதாம்.

பல்கலைக்கழக வரலாற்றில் முன்னறிவித்தலின்றி திடீரெனப் பாடத்திட்டம் மாற்றப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

பல்கலைக்கழகம் அக்டோபர் மாதம் இரண்டாம் கிழமை ஆரம்பிக்கப்படு முன்னரே இரு மாதங்களாக யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ள சில தனிப்பட்ட உயர்தரக் கல்வி நிலையங்களில் வெளிவாரி மாணவர்களுக்குப் பழைய பாடத்திட்டப்படியே விரிவுரைகள் ஆற்றப்பட்டதனுல் புதிய பாடத்திட்டப் பகுதியில் அடங்காத இவ்விரிவுரைகளுக்காக மாணவர்கள் பணமும், நேரமும் விரயமாகிவிட்டதாகக் கூறப்படுகிறது. இக்கல்வி நிலையங்களில் புதிய பாடத்திட்டப்படியே தற்பொழுது விரிவுரைகள் ஆற்றப்படுகின்றன.

ஜி. ஜி. க்கு 64 வயது

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் எம்.பி.யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு நாளை 64 வயதாகிறது. அவரது பிறந்த நாளையொட்டி இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் நேற்று நியூயோர்க்கிலுள்ள அவருக்கு வாழ்த்துத் தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளது. "உங்களின் பிறந்த நாளையொட்டி இன்று உங்களுக்கு தமிழ்பேசும் மக்களின் சார்பில் மனமுவந்த வாழ்த்துக்களையும் ஆசியையும் அளிக்கின்ருேம். நீங்கள் நீடூழி வாழ்ந்து இலங்கையின் மக்களுக்கு தொடர்ந்து பணிபுரிய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்" என்றுவாழ்த்துத் தந்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜி. ஜி. தங்கமாட்டார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் ஐ. நா. வில் இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதியாக நியமிக்கப்படக் கூடுமென்பது பற்றியோ அவர் இலங்கைக்கு வெளியே நிரந்தரமாகத் தங்கிவிடுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகவோ காங்கிரசுக்கு எதுவும் தெரியாது என்று தமிழ்க்காங்கிரஸ் காரியதரிசி திரு. ஏ.சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

நகரசபைத் தேர்தல்

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பு நகரசபை மாநகரசபையாவதை முன்னிட்டு இந்த வருடம் நடைபெறவிருந்த பொதுத் தேர்தல் அடுத்த வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருப்பதாக நகரசபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

தம்பதிகள் போட்டியின்றி தெரிவு

காலி, சனி

சமசமாஜ கட்சியைச் சேர்ந்த திரு. எல். சி. டி. சில்வாவும், அவரது பாரியார் திருமதி பேர்ள் டீ சில்வாவும் வட்டுகெதர பட்டின சபைக்குபோட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். காலி உதவி தேர்தல் அதிகாரி திரு. ஏ. டபிள்யூ. டி. சில்வாவினுல் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பலப்பிட்டியா எம். பி. யான திரு. எல். சி. டி. சில்வா பட்டினசபை ஆரம்பநாள்முதல் கடந்த 9 வருடங்களாக வட்டுகெதர பட்டினசபைத் தலைவராக இருந்து வருகிருர். அவரது பாரியார் திருமதி பேர்ள்டீ சில்வா பட்டன சபையின் முதலாம் வட்டார அங்கத்தினராக இருந்திருக்கிருர்.

மற்ற எல்லா வட்டாரங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சமசமாஜ கட்சிக்கும் போட்டியிருக்கின்றது.

நாடுகடத்தப்பட்ட நபர் இங்கு மீண்டும் கைது

ஒருவருடத்தில் 3 தடவைகள் பொலிஸாரிடம் சிக்கினர்

மாவிட்டபுரம், சனி

சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்ததாக இரண்டு தடவை கைதுசெய்யப்பட்டு இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட ஒருவர், நேற்று மூன்ருவது தடவையாக பொலிஸாரிடம் அகப்பட்டுவிட்டார்! பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள இந்த நபரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நபரை மூன்று தடவைகளும் ஒரே பொலிஸ் கான்ஸ்டபிள்தான் கைது செய்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவில் இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த மாரியப்பா கறுப்பையா (47) என்ற இந்த நபர், நேற்று கீரிமலையிலிருந்து பருத்தித்துறைக்கு பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பொழுது காங்கேசன்துறை பொலிஸைச் சேர்ந்த திரு. இமற்றிகொட என்ற பொலிஸ் கான்ஸ்டபிளினுல் மூன்ருவது தடவையாக கைது செய்யப்பட்டார்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் சட்ட விரோதக்காரரென மாரியப்பா கறுப்பையா கைதுசெய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டபொழுது தப்பியோடிவிட்டார். பின்னர் சில மாதங்களுக்குப் பின்னர்

(10-ம் பக்கம் பார்க்க)

தேவராஜா கஃேஜ்
நாவாந்துறை பீச்ரோட்டில் இன்று காலை 9-30 மணிக்கு திறக்கப்படவிருக்கும் மேற்படி திறப்பு விழாவுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம். திரு. N. தெய்வேந்திரம் அவர்கள் திறந்துவைப்பார்கள். கொண்டாட்டம் நான்கு நாட்கள்வரை நடைபெறும்.
A. தேவராஜா.
1243

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்
பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு
உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்

தீப்புண், கொதிப் புண்களுக்கு சிகிச்சை

நோயும் சிகிச்சையும்—5

க. வேல்மணி
அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி, கொழும்பு

நெருப்பினாலும், சுடுநீரினாலும் வேறு வேறு பொருட்களாலும் உடலில் புண்கள் உண்டாகலாம். இப்புண்கள் கொப்புளங்களாகிப் பெருந் துன்பத்தைக் கொடுக்கும். கடுமையான தீப்புண்கள் உயிருக்கு அபாயம் கொடுப்பதுடன் திடீர் அதிர்ச்சியையும் உண்டாக்குகின்றது. துணிமணிகளில் நெருப்புப் பிடித்தால் நிலத்தில் உருண்டோ அல்லது தடித்த கம்பளத்தால் உடலைச் சுற்றியோ நெருப்பை அணைத்துவிடலாம். நாங்கள் சுடுநீர் அருந்தும் போது வாயையும், தொண்டையையும் அவித்துக்கொள்ளுவோம். சிலசமயங்களில் சிறுகுழந்தைகள் சுடுநீரைக் கால், கைகளில் ஊற்றிக் கொள்ளுவார்கள்.

தீப்புண்கள் அல்லது கொதிப்புப்புண் ஏற்பட்டதும்சிகிச்சைசெய்யத் தெரியாதவர்கள் உடனடியாக வைத்திய நிலையத்தை நாடுவதே சிறந்ததாகும்.

தீப்புண் ஏற்பட்ட இடங்களில் உள்ள ஆடைகளை கத்தரிக்கோலால் நீக்கிவிட வேண்டும். புண்களுடன் ஒட்டிய துணியை இழுக்கக் கூடாது. புண்களுடன் ஒட்டியிருக்குமாயின் ஒட்டிய பகுதியை வெட்டிவிடவேண்டும். பின்பு குளிர்ந்த தடிப்பான தேயிலைக் கஷாயத்தை அல்லது ஒரு பைந்து நீரில் ஓர் அவுன்ஸ் அப்பச்சோடாவைக் கலந்த திராவகத்தை சுத்தமான துணியில் தோய்த்துப் புண்களின்மீது போடவேண்டும். அயடெக்ஸ் களிம்பு அல்லது ரொனிக் அசிட் என்பன மிகவும் உத்தமமான மருந்துகளாகும். புண்களின் மேல் காற்றுப்படவிடாமல் தடித்த துணியால் மூடிக்கட்டிவிட வேண்டும். எந்தக்கொதிப்புத் தீப்புண்களையும் மழை நீர், மை, தேன், தாமரை ஊறல் நீர், வெட்டி இலாமிச்சு வேர் ஊறல் நீர், புளியமிலை நீர் முதலியவற்ருல் கழுவலாம். தீப்புண் ஏற்பட்டவுடனும் போடலாம்,

சீழ்பிடித்தலைத் தடுப்பது

கொதிப்புண், தீப்புண் ஏற்பட்டநபருக்குஅதிர்ச்சிஏற்படாது பார்த்துக்கொண்ட பின்னர் அதே நபரின் புண்களில் சீழ்பிடியாமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என யூனிட் ஆராய்ச்சி மூலம் கூறப்படுகிறது. புண்கள் ஆறுது மேலும் மேலும் சீழ்பிடிப்பதாக இருந்தால் நோயாளிக்குமரணத்தையே உண்டு பண்ணும். இதைத் தடுப்பதற்கு நோயாளியின் புண்களைத் தினமும் கழுவிச்சுத்தம் செய்து கட்டுப்போடவும். நல்ல பிண்ட தைலம், சேர்வைகள், பச்சை எண்ணெ முதலியன பூசி நல்ல கனமான துணி பஞ்சுகளால் மூடி பாண்டேச்சுத் துணியால் கட்டவேண்டும். இப்படிக்கட்டுவதனுல் விஷக்கிருமிகள் உட்செல்லக்கஷ்டம் ஏற்படுகிறது. வாரம் ஒரு முறையோ காலையில் அல்லது மாலையிலோ பான்டேச்சுத்துணியை அவிழ்த்துப் பின்னரும் சுத்தம் செய்து பாண்டேச்கட்டுவது சிறந்ததாகும்.

மேலாகச்சுட்ட புண்களின் மேல் சருமஅமைப்பு துரிதமாக ஆறிவிடும். ஆனுல் முழுச் சதையும் எரிந்து போன புண்களையும், அவலட்சணமான தழும்புக்கிடங்குகளையும் சீக்கிரம் குணப்படுத்த நோயாளியின் தேகத்தின் இதரபகுதிகளிலிருந்து சதையை வெட்டி எடுத்து கிடங்காக எரிந்த புண்களுள்ள இடங்களில் ஒட்டிக் கூடிய சீக்கிரம் மாற்றலாம். இதை வைத்தியர்தான் செய்யவேண்டும்.

1. மெல்லிய ஊசியை எடுத்துத் தீப்புண் உள்ள இடத்தின் மேற்பகுதியில் குத்தினுல் நோ உள்ளபகுதியின் மேல்தோல் எரிந்த பகுதியென்றும், 2. நோ உணர்ச்சி ஒன்றும் தெரியாவிடில் அவ்விடத்தில் முழுச் சதையும்எரிந்துபோனபகுதி என்றும் பிரிக்கலாம். அப்பகுதியிலுள்ள உணர்ச்சி நரம்பு முடிச்சுகள் எரிந்து விடுவதால் எவ்வித நோவும் வலியும் தெரிவதில்லை. இதனைச்சோதித்துப் பார்த்துத் தெரிந்துகொள்வது சுதேச வைத்தியரின் கடமை. புண் ஏற்பட்ட அன்றே சதைப் பகுதியை ஆராய்ந்துஅகற்றி உடனுக்குடன் வேறு சதை வைத்து ஒட்டிக் குணப்படுத்துவதே சிறந்ததாகும். கடும்புண்ஏற்படும் அதிர்ச்சி மயக்க காலத்தில் அதிகப்படியான இரத்த நீர்வெளியேறும். அதுமட்டுமன்றி, புண் பூரணமாய் மாறும்வரை, சதா நீர் கசிந்துகொண்டே இருக்கும். காயம் பெரிதாகவுமிருந்தால் உடலுக்குத் தேவையான புரோட்டீன் பதார்த்தம் கரைந்துகொண்டே வெளியேறுகையில் நோயாளி ஏககாலத்தில்மயக்கம், சித்தப்பிரமை, பெலவீனம், உணர்ச்சியற்ற நிலை என்பனவற்றுக்குஆளாகிறுன். ஆகவே இந்நிலைஏற்படு முன்பாக காயம் ஏற்பட்ட நோயாளிகளுக்கு அதிகப் புரோட்டீன் உணவுகளைக் கொடுக்கவேண்டும்.

பின்வருவன புரோட்டீன் உணவுகள்

இறைச்சிவகை, மீன், முட்டை (முட்டை வெள்ளைக்கருவில் புரோட்டீன் சத்து அதிகம் உண்டு), பால், உழுந்து, பயறு, துவரை, முதிரைப் பண்டங்கள் (Pulses) முதலியன அதிகம் கொடுத்தல் வேண்டும்.

நோயாளிக்கு அதிர்ச்சி ஏற்படின் கோப்பி கொடுக்கலாம். அதிர்ச்சியினுல் மயக்கம்ஏற்படின் நோயாளியின் தலையைத் தாழ்த்தி வைக்கவேண்டும். உற்சாகமளிக்கும் பானங்களை அடிக்கடி கொடுக்கவேண்டும். சாதாரண தீப்புண், கொதிப்புண்களுடன் ''இரத்தச் சோகை'' வியாதிகள் ஏற்படுவதுண்டு. இதைத்தவிர்க்க இரத்தம் உடலுக்குள் செலுத்த வேண்டும். இரத்தம் செலுத்த வைத்தியன் மறந்தாலும் நோயாளிக்குப் பக்கத்தில் உள்ளவர்கள் அதனை நினைவூட்டுவது அவசியம். கொதிநீரினுல் தொண்டையில் கொதிப்புண் ஏற்பட்டிருப்பின் தொண்டையைக் கம்பளி அல்லது தடித்த துணியால் சுற்றிக்கட்டிய பின்னர் ஒலிவ் நெய் குடிக்கக் கொடுக்கவும்.

சாதாரண தீப்புண், கொதிப்புண்ஏற்பட்ட இடத்தில் புண் மாறியபின்னரும் நோ இருக்குமானுல் புண் உள்ள பகுதிக்குமேல் பூமத்தமிலை வாட்டி வைத்துக்கட்டியோ அல்லது முட்டையை அவித்துக்கட்டியோ அல்லது கற்ருளை சுட்டுக் கட்டியோ நோவுள்ள இடங்களில் நோவைப்போக்கலாம்.

நோயாளிக்குகொதிப்புண் தீப்புண் முற்ருய் மாறிய சில நாட்களில் பேதிகொடுத்தல் நல்லது. ஆமணக்கு எண்ணெயோ சித்தலவங்காரியோ அல்லது கொன்றைப் புளியோ கொடுத்து மலத்தைப்போக்குதல் நல்லது.

இச்சையின் வசத்தில் செல்லும் மனது வருத்தத்தையுண்டாக்கும். ஆசையுள்ள மனதுக்கே பயம், கோபம், குரோதம், லோபம், விசனம் முதலியவைகள் உண்டாகும். ஆசை அக்கினியைப்போல் வருத்தத்தை உண்டாக்குவது.

—ஞானவசிட்டர்

O

சுதந்திரம் நமது பிறப்புரிமை என்றுமுழங்கிஞேம். துபோலவே நமது தாய் மொழியிலேயே ஆட்சியும், கல்வியும், நீதியும் பெறுவதும் நமது பிறப்புரிமை. இந்த உரிமை இல்லாதவரையில் வளர்ச்சியில்லை.

—சீனிவாசன்.

பண்டிகையும் படமாளிகையும்

— வி. என். பி. —

ஒட்டகம் ஓர் ஊசியின் காதில் நுழைந்தாலும் நுழையலாம், ஆனுல் ஒரு லோபி பரலோகத்தை அடைவது அதை விடக் கடினமான காரியம்.

ஒட்டகம் ஊசிக்காதில் நுழைவது நினைக்க முடியாத சம்பவம். அதைவிடக் கடினமாம் பணத்தைப் புதைத்து வைக்கும் மா பாவிகள் பரலோக வாயிலை எட்டியும் பார்ப்பது. இவற்றை விடக் கடினமான காரியம் ஒன்று இருக்கிறது; யாழ்ப்பாணத்தில் தீபாவளியன்று சினிமா பார்ப்பது.

என்ன பாபம் செய்தேஞே தெரியவில்லை - இம்முறை தீபாவளி தினத்தில் ஒரு சினிமா பார்க்க வேண்டுமென்ற ஒருவிதமான நப்பாசை என்னைத்தொடர்ந்து சிக்கெனப் பிடித்துக் கொண்டது. போய்விட்டேன். கேடு வரும் பின்னே, மதி கெட்டு வரும் முன்னே என்று தெரிந்தவர்கள் கூறுவார்கள். எத்தனையோ உத்தமர்கள் புத்திமதி சொன்னுர்கள், போகாதேஎன்று. நான் அதெல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு போய்விட்டேன்.

ஏற்கனவே கலரி கியூ நாலைந்து மடிப்புகள்வைத்துவிட்டது. டிக்கட் கிடைக்குமோ என்ற சந்தேகத்துடன் நானும்போய் தொங்கலில் நின்று கொண்டேன். எனக்குப் பின்னுல் பத்துப் பன்னிரண்டு பேர் வந்து நின்றபோதுகடைசியில் நிற்கின்ருேமே என்ற வெட்கம் மறைந்துவிட்டது.

'ஏனப்பா, இன்றைக்குப் பார்த்து கலரிக்குப்போ[illegible]ய்? மேல் கிளாஸுக்குப் போகப்படாதா?' என்று ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். எனக்குஅறிமுகமான ஒருவர். கியூவில் நின்ற அத்தனைபேரும் என்னை ஏற இறங்கப் பார்த்தார்கள். ரேட்டாலே போன அந்த முட்டாள் சும்மா போகப் படாதா? சமய சந்தர்ப்பம் தெரியாது, இதம் தெரியாது, எக்கச்சக்கமாக ஏவப்பட்ட அந்த வினவை, குத்துச் சண்டைக்காரர்போல, நைஸாக விலக்கிவிட்டு, 'எங்கேயப்பா போகிருய், இந்த வெய்யில் நேரத்திலே' என்று திருப்பி விட்டேன், ஓர் ஏவுகணையை. தன்னுடைய கேள்விக்கு நேரடியான மறுமொழி கொடுக்க விரும்பாமல் தான் நான் மறுத்தான் விட்டிருக்கிறேன் என்பதையும், பலர் முன்னிலையி[illegible]தான் அந்த மானத்தை விற்கிற கேள்வியைக் கேட்டது அசட்டுத்தனம் என்பதையும் உணர்ந்து கொண்ட அந்த மனிதர் பல்லை இளித்துக் கொண்டு அப்பால் போய் விட்டார்.

'ஐயா, ஒன்றேகால் ரூபாய். எடுக்கப்போகிறீர்களா?' என்று கேட்டுக் கொண்டே ஒரு முரட்டு ஆசாமி கலரிடிக்கட் ஒன்றை என் மூக்கில் நீட்டினுன். கள்ள டிக்கட்டாய் இருக்குமோ என்று நினைத்து அவனுடைய முகத்தைப் பார்த்தேன். 'இப்ப தானையா எடுத்துக்கொண்டு வருகிறேன்; இஞ்சை பாருங்கோ, சீரியல் நொம்பரை!' என்று சுட்டிக்காட்டினுன் அவன். கியூவில் நின்ற ஒருவர் 'எழுபத்தைந்து சதம்' என்ருர். உடனே அவர் மீது எழுத முடியாத சில பொழிப்பான வசைவுகள் பொழிந்தன. ஆமை தலையை இழுத்தது போல அவர் அடங்கிக் கொண்டார். கியூவிலேயே நின்று கொண்டிருந்தால் டிக்கட் கிடைக்காமலே போய்விடுமோ [illegible]ன்ற சந்தேகம் என்னைப் பற்றிக்கொண்டது. 65 சதம் பெறுமதியான டிக்கட்டை இந்த முரடன் ஒன்றேகால் ரூபாய் என்கிறுன். போனுல்போகிறதென்று நினைத்துக்கொண்டு அவனுக்கு மட்டும் தெரியத்தக்கதாக ஆள்காட்டி விரலை நீட்டிக் காட்டினேன். மறு பேச்சில்லாமல் ஒரு ரூபாய் நோட்டும் டிக்கட்டும் கை மாறின.

மண்டபத்துக்குள் நுழைந்தபோது ஒரே கும்மிருட்டாய் இருந்தது. விளம்பர 'ஸ்லைட்'டுகள் போடத் தொடங்கி விட்டார்கள். கலரியில் அரைவாசி நிரம்பிவிட்டது. மெதுவாக கைகளால் தடவிப் பார்த்துக் கொண்டே ஒரு வரிசையில் புகுந்தேன். கால்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

தேவை

எமது ''விடுதலை'' ஏட்டிற்கு புரட்சிகரமான கதைகள், கட்டுரைகள், கேலிச்சித்திரங்கள், கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. திறமையுள்ளோர் 25-11-65 க்குமுன் எழுதிஅனுப்பலாம். எமது முகவரி: மெரிலான்ட் இன்டஸ்றீஸ், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1345

எமது தொழிற்சாலையில் தொழிற் பயிற்சி பெறுவதற்கு 20 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 8-ம் திகதி 9மணிக்கு நேரில் வரவும். மெரிலான்ட் இன்டஸ்றீஸ், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1344

3000 குளி சிறுவாய்க்கால் மண்வெட்டு கொந்திருத்தில் அல்லது நாள் சம்பளத்திலும் உண்டு. உடன் வேலை ஆரம்பிக்க வசதியுண்டு. விவேகானந்தன், ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம். 1342

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தா கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

புதுரக சிகறெற் சையிக்கிளில் விநியோகம் செய்வதற்கு ஆட்கள் தேவை. எழுத வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும். நல்ல எதிர்காலம் உண்டு. சம்பளம் முதலியன நேரில் பேசப்படும். 8-11-65 காலை 8-00 மணிக்கு 74/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரில் சமுகமளிக்கவும். 1346

றேயன் நைலோன்புடவை தொழிற்சாலைக்கு தானுகவும். பாதி தானுகவும் இயங்கும் சக்தியுடைய தறியில் வேலை செய்வதற்கு நெசவாளர்கள் தேவை. தராதரம்: கைத்தறி நெசவில் தராதரப்பத்திரம். ஐந்தடிக்கு மேல் உயரம். பெண்கள் மாத்திரமே தேவைப்படுகின்றனர். விண்ணப்பதாரர்கள் தொழிற்சாலையிலிருந்து 1 மைல் சுற்றளவிற்குள் வசிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். கடிதம் மூலம் ஜவ்வர்ஜி பிறதர்ஸ், 135, மீரோரமுலரோட், வெல்லம்பிட்டியா, கொழும்பு என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1338

EDUCATIONAL

Applications Accepted for Admission to G. C. E Advanced Level Arts/Science Classes. United Institutes Nelliady, Karaveddi/107 Pointpedro Road, Nallur, Jaffna. 1197

Only Few Vacancies Exist in our G. C. E. Ordinary Level Arts/Science/Commerce Classes Enrol Without Delay. United Institutes, Nelliady, Karaveddi/107 Pointpedro Road Nallur Jaffna. 1195

விளம்பரம்

யாழ்ப்பாண மாநகரசபை

கேள்விப்பத்திர அறிவித்தல்

1966 ஆம் ஆண்டுக்கு மாநகரசபையின் பிரசவ விடுதிகளின் அழுக்குத்துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் 20-11-65 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை 18-11-65 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ரூபா 50/- வைப்புப் பணமாகவும், ரூபா 5/- கேள்விப்பத்திரப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

3. இதன்கீழ்க்கையொப்பமிட்டவரிடமிருந்து அல்லது மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப்பத்திரம் பற்றிய ஏனைய சகல விபரங்களையும், நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்: ஏ. எச். ஏ. சமி,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
4-11-65.

1238

தமிழ் வளர்த்த ஐரோப்பியர்

திராவிட இயல் ஆராய்ச்சியின் முதல்வர் கோல்ட்வெல் 'ஐயர்'

— ஆ. தேவராசன் —

ஐரோப்பியர் வருகையால் தமிழுக்கு நன்மையும் ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்கமுடியாது. தமிழ் வளர்ச்சி அடையாத சில பகுதிகளில் பெரும் மாற்றங்களை, வளர்ச்சியை ஏற்படுத்தித் தந்தார்கள் இவர்கள்.

பிறப்பும் குடும்பமும்

ஐரோப்பாவிலிருந்து வந்தவர்களுள் ஒருவர்தான் கோல்ட்வெல். கோல்ட்வெல்ஐயர் என்றே நம்நாட்டில் பலராலும் அழைக்கப்பட்டார். இவர் 1814-ம் ஆண்டில் அயர்லாந்தில் பிறந்தார். பத்துஆண்டுகளின் பின் தாய் தந்தையர் ஸ்கொட்லாந்துக்குச் சென்றகாலை அவர்களுடன் அங்கு சென்றார். ஆங்கில இலக்கிய இலக்கணங்களைச் செவ்வனே கற்றார். இதன்பின்னர் தந்தையார் விருப்பப்படி ஓவியமும் பயின்று சிறந்துவிளங்கினார். இருபதாம் வயதளவில் கிறித்தவ சமயத் தொண்டில் ஈடுபட எண்ணி கிறித்தவசபையில் உறுப்பினரானார். இச்சங்கத்தின் ஆதரவில் கிளாஸ்கோ பல்கலைக்கழகம் சென்று ஐரோப்பியத் தென்மொழிகளிலமைந்த சமய, நீதி நூல்களைக்கற்றார். அங்கு கிரேக்க மொழிப் பேராசிரியராக இருந்தவர் கிரேக்க மொழியை ஏனைய மொழிகளுடன் ஒப்புநோக்கிச் சிறப்புகளை விளக்கிக்காட்டினார். இது கால்ட்வெல் ஐயரை பெரிதும்கவர்ந்தது. அதில் மிகவும் ஈடுபட்டு இவரும் பயிலத் தொடங்கினார்.

தமிழ்நாட்டுவருகை

இதே காலத்தில் தமிழ்நாட்டில் கிறித்து சமயத் தத்துவங்களைப்பரப்ப ஓர் அறிஞர் தேவைப்பட்டார். அங்கிருந்தவர்கள் கண்கள் இவர்மீது பாய்ந்தன. இளைஞரான இவர் இக்கட்டளையை ஏற்று 1838-ம் ஆண்டு சென்னைக்குவந்தார். வந்தகாலை சென்னையில் புகழுடன் விளங்கிய துரு என்ற அறிஞருடன் மூன்றாண்டுக் காலம் தங்கி கிறித்தவ சமயப் பிரசாரத்துக்காகத் தமிழ்மொழியை அக்கறையுடன் படித்தார். தமிழறிவு மேம்பட அக்காலத்தில் தமிழறிவும் பெற்றுச்சிறப்புடன் விளங்கிய வின்ஸ்லோ, போப்போன்றாரின் உறவும் ஆதரவும் கிடைத்தது. 1841-ம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார். பின்பு மதுரைக்குச் சமயப்பணி புரியச் சென்றார். இந்த நானூறு கல் தொலைவையும் நடந்தே சென்றார். செல்லுங்கால் வழிநெடுகிலும் மக்களுடன் அளவளாவி மக்கள் பழக்க வழக்கங்கள், பேச்சு வழக்குகள், அவர்கள் பேசியதிருந்தாத மொழிகள் இன்னபிறவற்றையெல்லாம் ஆராய்ந்த வண்ணமே சென்றார். தமிழர் பண்பாடு, கலைத்திறன்போன்றவற்றையெல்லாம் வெகுவாகப்பாராட்டினார். இவர் வழி நெடுகிலும் பெற்ற அனுபவத்தைப் பற்றி மறைந்த பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் "கால்ட்வெல் ஐயர் சரிதம்" என்ற நூலில் விபரமாகக் கூறுகின்றார்.

திருமணம்

திருநெல்வேலியில் வாழ்ந்த காலை 1843-ம் ஆண்டு எலிசா என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். இரண்டு பெண்களும், ஒரு ஆணுமாகமூன்று பிள்ளைகள் பிறந்தனர். இளைய மகள் மணம் முடித்த சில ஆண்டுகளுக்குள் மறைந்துவிட்டாள். இவ்வாறிருந்த பொழுது அவரது தமிழ்ப் புலமை மிக்கது.

தமிழ்ப்பணி

தமிழில் உள்ள "பிரார்த்தனை நூலை" திருத்தி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார் இவர். "திருநெல்வேலிச் சரித்திரம்", "தாமரைத் தடாகம்", "ஞானஸ்நானம்" "நற்கருணை", "நற்கருணை தியானமாலை" ஆகிய நூல்களை இயற்றினார். அவர் வசன நடைக்கு எடுத்துக்காட்டாக "நற்கருணைத் தியானமாலை" யிலிருந்து இதோ ஒரு பகுதி:

"இதைக்குறித்து நெடுக விசாரப்பட்டு இக்குறையைத்தீர்க்க என்ன செய்யலாமென்று யோசித்து, நற்கருணைத்தியானப் புத்தகமொன்றைச் செய்யும்படி தீர்மானித்ததின் பேரில் ஐரோப்பாக் கண்டத்தில் உத்தமபக்தியும் ஞானமுமுள்ளகுருமார் அக்கண்டத்துக்கிறித்தவர்கள் பிரயோசனத்திற்காகச் செய்த நற்கருணை ஆயத்தப் புத்தகங்களைப்பரிசோதித்து அவற்றில் இத்தேசத்துச் சபையார் புத்திக்கும் தமிழ் மொழிக்கும் இசைந்தவைகளைத் தெரிந்தெடுத்து, கூட்டியும் குறைத்தும் இப்புத்தகத்தை உண்டாக்கி இருக்கிறேன்."

திராவிடவியற் புரட்சி

ஐயரவர்கள் தமிழ்மொழியையும் ஏனைய மொழிகளையும் நன்கு கற்றிருந்தமையால் அவற்றை நன்கு ஆராய்ந்து நூலொன்றை வெளியிட்டார். "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற இந்த நூல் 1856-ல் வெளியிடப்பட்டது. இந் நூலை ஆங்கிலத்திலேயே எழுதினார். இது கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் கவனத்தை ஈர்த்தது. இதன் சிறப்பைக்கண்டு இவருக்கு "டாக்டர்" பட்டம் வழங்கினர். இந்நூல் திராவிட மொழியியலிற் புரட்சியையே ஏற்படுத்திவிட்டது.

கோல்ட்வெல் ஐயர் வாழ்ந்தகாலை அனைத்துமே வடமொழியின்றும்தோன்றியவைதாம் என்ற கொள்கை பன்னெடுங்காலம் தொட்டு இயக்கரீதியாகப் பரப்பப்பட்டு வந்த கொள்கையாக இருந்தது. தமிழ்கூட வடமொழியிலின்றும் தோன்றியதுதான் என்ற நம்பிக்கையில் பலர் இருந்தனர். இந்த நம்பிக்கையைப் பரப்புவதில் பலர் தீவிரமும் காட்டினர். ஆனால் கோல்ட்வெல் ஐயர் செய்ந்ததுறைபோந்த ஆராய்ச்சியின் பின்னர் வடமொழி வேறு, தமிழ்மொழி வேறு (திராவிட மொழிகள்) என்ற கருத்து நிறுவப்பட்டது. இதனால் இவ்விரண்டு மொழிகளின் தொடர்பு பற்றிய நிலவிய கருத்தில் மட்டுமன்றித் திராவிடமொழியியலிலுமே பெரிய புரட்சி ஏற்பட்டது. இதுதான் கோல்ட்வெல் ஐயர் கொண்ட முடிபு.

"திராவிடமொழிகள் அனைத்திலும் மிகவும் திருந்தியபண்பட்ட நிலையிலுள்ள தமிழ் மொழியோ, வேண்டுமென்றால், வடசொற்களை அறவே அகற்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்திருப்பதோடன்றி அவற்றின் உதவியில்லாமல் மிகவும்மேம்பட்டு, வளமுற்று மிளிரும் ஆற்றலும் வாய்ந்ததாகும்."

அனைவரும் ஏற்றனர்

திராவிட மொழி ஆராய்ச்சியில் ஒருபுதிய திருப்பத்தை வடமொழியின் அழுத்தத்தோடு கொடுக்க எத்தனித்த காலஞ்சென்ற பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கூட கோல்ட்வெல்ஐயரின் முடிவுகளுக்கு ஆதாரரீதியான மறுப்புக் காணமுடியாது அவற்றை ஏற்றுக்கொண்டார்.

"பன்னூறு ஆண்டுகளாக இவ்வடமொழி நமது நாட்டில் எங்கும் பயிலப்பட்டு வந்துள்ளது. நமது தேசியக் கருவூலங்கள் எளிதில்யாரும் செல்ல இயலாத இம்மொழிக் குகையினுள்ளே பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. மக்களுக்குரிய அறிவுத்துறைகள் பெரும்பாலும் இப்பண்டைமொழியிலே ஒருவாறு காணப்படுகின்றன. நமதுநாட்டிலுள்ள இனத்தவர்களில் பெரும்பாலாரும் இம்மொழியில் நூல்கள் இயற்றி இதனை வளர்த்துவந்திருக்கிறார்கள். இப்போது உயிருடன்வழங்கி வருகின்ற மொழிகள் அனைத்தும் வளர்ந்து பெருகுவதற்கு இவ்வடமொழி பெரிதும் துணைபுரிந்திருக்கின்றது" என்று கூறும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களே இதையும் கூறுகின்றார்.

"மேலும் நமது தாய்மொழிகளும் அவற்றிலுள்ள நூல்களும் வளத்திலும் தொன்மையிலும் வடமொழிக்குச் சமமானவையாகும் தமிழ்மொழியை எடுத்துக்கொண்டால் இது மிகவும் உண்மை என்பது புலப்படும்... மொழியாராய்ச்சி என்ற கண்கொண்டு நோக்கினால், இம்மொழியானது திராவிட மொழிகள் எல்லாவற்றுள்ளும் மிகத் தொன்மை வாய்ந்து பயிலப்பட்டதென்பதும், மிகவும் சொல்வளம் நிரம்பியதென்பதும், ஐயத்திற்கிடமில்லாதபடி மிகப்பழைய சொல்

(6-ம் பக்கம் பார்க்க)

நயினையம்பதி தந்த புலவர் பாரதியடியான்

— வ. பொன்னம்பலம் எம். ஏ.

பாரதிவிழாவில் பேசுவதற்காக சில வாரங்களுக்கு முன்னர் நயினாதீவுக்குச் சென்றிருந்தோம். கூட்ட அமைப்பாளர், "நாம் தங்கும் இடம் எது?" என்று கேட்டதற்கு பாரதி அகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்றார். "பாரதி அகம்" என்பது யாருடைய இல்லம்?" என்று கேட்கப்பட்டபோது, "பாரதி மீது கொண்ட பற்றினால் 'பாரதி அடியான்' என்று அழைக்கப்பட்டு வந்த ஒருவரின் இல்லம் அது" என்று பதில் கிடைத்தது. (திரு. ப. கு. சரவணபவன் என்பது அப் பெரியாரின் பெயர்.)

பாரதி அடியான் பற்றிய விவரங்களை நயினாதீவு சனசமூக நிலயத்தினரால் 1951-ம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரசுரமொன்றில் படித்துப் பார்த்தேன். 1909-ம்ஆண்டில் புரட்டாதி மாதம் பாரதியடியான் பிறந்தார். இவர் இளமைப் பருவத்தில் வித்துவான் கணேசையரிடமும், வேலணையூர் தம்பு உபாத்தியாயரிடமும் தமிழ் கற்று வந்தார். சிறுவயதிலேயே கவித்துவம் படைத்தவராக விளங்கிய பாரதியடியான் புவியியல், சரித்திரபாடங்களைச் செய்யுள் ரூபமாக யாத்து மாணவர்க்கு உதவினர். அமரகவி சுப்பிரமணிய பாரதியின் வாழ்விலும் இலட்சியங்களிலும் அளவு கடந்த பற்றுடன் வளர்ந்த இப்புலவர் தமது 40-வது வயதில்இயற்கையெய்தினார்.

இவர் தோட்டப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார். கடைசியாக 1949-ம் ஆண்டு 'எட்னா' தோட்டத்தில் கல்வி கற்பித்தார். வாழ்வில் வறுமை வாட்டிய போதிலும் துரைமாரின் அதிகாரத்துக்கு அடிபணிய மறுத்து, தோட்டத்துரைமாரையும் கங்காணிமாரையும் அவர்களின் கொடுமைக்காக எதிர்த்தார். இவரை பணம்படைத்த சிலர் பல வழிகளிலும் அவமானப்படுத்தவும் பழிவாங்கவும் முயன்றனர். எத்தனை கஷ்டங்கள் ஏற்படினும் தம் குரு வாழ்வை யெண்ணி மனச் சாந்தியாக வாழ்ந்தார். பாரதி இலட்சியத்தில் இருந்து புலவர் சற்றேனும் வழுவினாரில்லை.

பாரதியினுடைய மரபில் இவர் கவிதை புனைந்துபாடியுள்ளார். 'நயினை நாகாம்பிகைப் பதிகம்' என்பது இவரால்பாடப்பட்ட ஒன்றாகும். தெய்வீகப் பாடலிலும் கூட இவர் சமூக நீதியை மறந்தாரல்லர். "அடிமை இவர், குடிமை இவர், அவர் சிறியர், இவர் எளியர், இங்கெமை நிகர்வர் ஆர்?" என்று இறுமாந்து இருக்கும் எம்மவர்களை 'சாதியென்னும் சுழிப்பட்டு' நின்று தடுமாறும் நிலையில் இருந்து மீட்க மணிவாசகரின் குரலை பாரதிவழிநின்று பாரதியடியான் பாடியுள்ளார். தேசிய கீதமும் காந்தீயம் பற்றிய பாடலும் இவருடைய சன்மார்க்க நெறியை சமய சமரச வழியில் எமக்கு நினைவுபடுத்துகின்றன. 'தமக்குறுதி எண்ணுதார் பிறர்க்குறுதி எண்ணும்' நிலைகண்டு இரங்குகிறார் பாரதியடியான். 'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சண்டையிடீர்' என்று காந்தியப்பகுதியில் பாடிய புலவர் இந்திய மக்களின் விடுதலை வேண்டிய காந்தியை 'கலியுகத்தே கண்கண்ட காந்திமகாதெய்வம்' என்று வாழ்த்துகின்றார்.

பாரதியடியான் தன்னுடைய அளவு கடந்த தேசபக்தியை 'ஈழமாதா திருப்பள்ளியெழுச்சி' என்னும் கவிதையில் அழகுறநிரூபித்துள்ளார். 'பாலர்கள் பசிகொண்டு பால்மொழிகூறிப் பரிதவித்துன் முகம் பார்த்தழல் பாராய், மாலுற்றிதும் பஞ்சப்பேய் விழித்தாட மார்க்கம் ஏதுமட்டும் இன்னல் உற்றனம் ஈழமாதா பள்ளி யெழுந்தருளாயே' என்று தமதுபாடலில்வேண்டுகிறார். சிங்கள அரசர்களை தேசிய மன்னர்களாகக் கொள்ளும் மனப்பான்மை பாரதியடியானிடம் சிறந்து விளங்கிய பண்பாகும். "பராக்கிரமபாகு தன் பராக்கிரமத்தாலே பண்ணிய நீர்நிலை மண்மூடிப்போச்சு" என்றும் "துட்டகைமுனு வென்ற சொற் சொல்லுவோரே துணிவுடை

(6-ம் பக்கம் பார்க்க)

அழுக்கணவன், புழு, பூச்சி 3ம் அழிப்பதற்கு புதிய ஜெர்மன் மருந்து
லெபெசிட்
LEBAYCID
BAYER
T'GRAMS:- ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA

ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone 285

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி 22 மீ௳ (7-11-65)

அரசியல் வாதிகளுக்கு 'பென்சன்'

அவர் ஓர் அரசியல் வாதி. மக்களின் மதிப்பைப் பெற்றவர். அரசியலில் ஈடுபட்டதால் ஆஸ்தியெல்லாம் இழந்து ஆண்டியாகும்நிலை. உழைப்பும்குறைவு. "அரசியலுக்குஒரு முழுக்குப்போட்டுவிட்டு தொழிலை ஒழுங்காகப்பார்த்தால் போதும். இப்படி அரசியல், அரசியல் என்று நாளும் பொழுதும் அதையே கட்டித் தழுவிக்கொண்டிருந்தால் நாளைக்கு எனக்கும் பிள்ளைகளுக்கும்யார் கஞ்சிவார்ப்பது?" இது அவரது மனைவி அவரிடம் அடிக்கடி கேட்கும் கேள்வி. அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதற்கு அவர் மனதில் சிறிது சபலம் தட்டினாலும் அவரது ஆதரவாளர்கள் அவர் வீட்டில் போய் 'சத்தியாக்கிரகம் செய்து' எங்களை கைவிட்டு விடாதீர்கள். அரசியல் துறவறம் உங்களுக்கு வேண்டாம்' என்று அடம் பிடிப்பார்கள். மக்களின் அன்புக் கட்டளைக்கு அவர் பணிந்துவிடுவார் மனைவியின் கட்டளை நிராகரிக்கப்பட்டுவிடும்.

மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற ஓர் அரசியல்வாதி மக்களுக்குத் தொண்டு செய்தே மறைந்துவிட்டார். அவர் தேடிவைத்ததெல்லாம் மக்களின் அன்பு தான். கூட்டங்களில் மக்கள் அவருக்கு சூட்டியமலர் மாலைகளின் வாளை நார்கள் கூட மிஞ்சவில்லை. அவர் மறைந்து ஆண்டுகளாகிவிட்டன. ஆண்டுக்கொரு கூட்டம் அவர் நினைவாக நடைபெறும். ஊர்வலங்கள், மேளதாளங்கள், வாணவேடிக்கை எல்லாமே இந்த நினைவுதினக் கூட்டங்களில் இடம் பெறும். மறைந்த தலைவரைப்பற்றியும் அவர் செய்த அளப்பெரும் சேவைகள் பற்றியும் இருக்கும் தலைவர்கள் அன்றைய தினத்தில் மணிக்கணக்காகப் பேசுவர். மீண்டும் அடுத்த வருடம் நினைவு தினக் கூட்டங்கள். ஆனால் மறைந்த அந்தத்தலைவரின் வீட்டிலோ மனைவி, மக்கள் ஒருவேளை உணவுக்கும் சில சமயம் அல்லல் படுவது யாருக்கும் தெரியாது.

மற்றொரு அரசியல்வாதி மக்களுக்காகவாழ்நாளெல்லாம் உழைத்து வயது சென்ற நிலையில் அன்றாடச் சீவியத்துக்கே கஷ்டப்படுகிறார். அவர் இறந்திருந்தாலாவது ஆண்டுக்கொரு நினைவுக் கூட்டம் நடைபெறும். அவர் உயிருடனிருப்பதால் அவரையும் அவர் செய்த தொண்டுகளையும் மக்கள் மறந்து விட்டார்கள். தமது பழைய நண்பர்களிடம் சென்று கௌரவமாக யாசகம் பெறவேண்டிய நிலையிலிருக்கிறார் அவர். தனது அவல நிலையை அவரே சில சமயங்களில் வெளிவெளியாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இப்படிப் பகிரங்கமாக அவர் மனவேதனையோடு தனது நிலையைக் கூறியதால் சிறு உதவியும் பெற்றிருக்கிறார்.

அரசியலில் ஈடுபட்டு, மக்களுக்காகத் தங்கள் உடல், பொருள் யாவற்றையும் அர்ப்பணித்தவர்களுக்கும் தம் உயிரையும் தியாகம் செய்தவர்களின் குடும்பத்துக்கும் உதவிசெய்ய வேண்டியது மக்களினதும் மக்கள் அரசாங்கத்தினதும் கடமையாகும். இந்த வகையில், அரசியலிலிருந்து ஓய்வு பெறும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பென்ஷன் வழங்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் கொண்டுவரவிருப்பதை மக்கள் வரவேற்பர். முதுமைக் காலத்தில் பணவசதியின்றிக் கஷ்டப்படும் தனிப்பட்ட ஒருசில அரசியல்வாதிகளுக்கு பணவசதி செய்ய அரசாங்கம் முன்வந்திருப்பதையும் மக்கள் பாராட்டுவர். பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கு அலவன்ஸ்பணமென்ற பெயரில் சம்பளம்வழங்கப்படுவது உண்மைதான். ஆனால் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களுக்குப் பலவகைகளிலும் உதவி செய்ய வேண்டியிருக்கும். அவர்களுக்கு இந்த அலவன்ஸ் போதுமானதென்று கூறமுடியாது. அரசியல்வாதிகள் நாட்டுக்குச் சேவைசெய்யும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்களுக்குச் செலவும் அதிகம்; பொறுப்பும் அதிகம். எனவே அரசியலிலிருந்து ஓய்வு பெற்று முதுமைக் காலத்தில் கஷ்டப்படாதிருக்க அவர்களுக்கு பென்ஷன் வழங்குவது நியாயமானதே.

ஆனால் நமது அரசியல்வாதிகளிடம் அனாவசியச் செலவும் ஆடம்பரச்செலவும் உண்டு. அவற்றை நீக்க வேண்டியதும் அவர்களுடைய அவசியமான கடமைகளில் ஒன்று. தேர்தலுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு தொகைதான் செலவிடப்படவேண்டுமென்பது தேர்தல் விதி. ஆனால் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர் செலவிடும் தொகை மிகமிக அதிகம். சொத்துடன்ள ஒருவர் அரசியலிலீடுபட்டு மக்களுக்குச் சேவை செய்வதால் தனது சொத்துக்களை இழப்பதைவிட தன்னுடன் தேர்தலில் போட்டியிடுபவரை எதிர்த்து அவர் செய்யும் செலவைவிட அதிகம் செலவுசெய்வதனால் சொத்துக்களை இழப்பதே அதிகம் வாணவேடிக்கை, ஊர்வலம், மதுபானம் இவைகளெல்லாம் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வதையே குறிக்கோளாகக்கொண்டு அரசியலில் ஈடுபடுவோர், தாம் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காகச் செய்யவேண்டுமா?

மலர்மாலை முதல் மத்தளம் வரை மேடை முதல் பேச்சாளர் வரை தேர்தல் பிரசாரக்கூட்டங்களுக்கும் தேர்தல் முடிந்தபின் பாராட்டுக் கூட்டங்களுக்கும் ஆதரவாளர் பெயரில் பொதுவாக நமது அரசியல்வாதிகளே ஒழுங்கு செய்பவர்களென்பதும் அவர்களே இதற்குச் செலவு செய்கிறார்களென்பதும் பகிரங்க இரகசியம். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்னர் பாராட்டுக் கூட்டங்களுக்கு ஆடம்பரச் செலவுகள்தாம் எதற்கு? தேர்தல் பிரசாரச் செலவுகளையும், பாராட்டுக் கூட்டங்களுக்கான செலவுகளையும் குறைத்துக்கொண்டாலே அரசியல்வாதிகள் பலரின் சொத்தும் தேட்டமும் மிஞ்சும். நமது அரசியல்வாதிகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விஷயங்கள் இவை.

ஈஸ்வர தியானத்துக்குகோவில்கள் அவசியமாவது ஏன் ?

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் ஞான மொழிகள்

— கே. எஸ். பரிபூரணனந்தர்

நெல்லினுள் இருக்கும் அரிசிதான் அதை முளைக்கச் செய்வதற்கு அவசியமானதென்பதும், அதன் மேலிருக்கும் உமி பிரயோசனமற்றதென்பதும் யாவரும் அறிந்தஅபிப்பிராயம். ஆனாலும் உமி நீங்கிய அரிசியை விதைத்தால் அது முளைத்துப் பயிராகி நெல் விளைவதில்லை. அப்படி நெல் விளைய வேண்டுமானால் அதற்கு உமியுடன் கூடிய தான்யத்தை அப்படியேவிதைக்க வேண்டும்.

சாப்பிடுவதற்கு அரிசி வேண்டும் போது நெல்லினின்றும் உமியைப் பிரித்து விடவேண்டும். இதுபோல ஒரு தருமம் நிலைத்துவளருவதற்கு கிரியைகளும்சடங்குகளும் அவசியம் அவை முளைக்கும் வித்தாகிய உண்மையைத் தம்முள்பொதிந்து வைத்திருக்கின்றன. ஆதலால் ஒவ்வொரு மனிதனும் அவற்றுள் அடங்கியிருக்கும் உண்மையாகிய தத்துவப் பொருளை அடையும்வரையில் மேற்கூறியகிரியைகளைக் கைவிடாது செய்துகொண்டு தான் வரவேண்டும்.

○

விலையுயர்ந்த முத்தை தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் சிப்பிக்கு மதிப்பில்லையானாலும் அம்முத்தின் வளர்ச்சிக்கு அது அத்தியாவசியமாகின்றது. முத்தைப் பெற்ற மனிதனுக்கு அச் சிப்பியால் யாதொரு பிரயோசனமுமிராது. அது போல மிகவும் உயர்ந்த உண்மைப்பொருளை அதாவது ஈசுவரனை அடைந்தவனுக்கு சடங்குகள், கிரியைகள் முதலியன அவசியமாகவிரா.

ஆத்மஞான வாழ்க்கைக்கு ஆரம்பகாலத்தில் கிரியைகள் உதவியாக இருக்கும். ஆனால் அதில் முன்னேற்றம் அடைந்ததும் அவைகளை அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை. அப்போது கடவுளிடம் மனம் குவிந்துவிடுகின்றது. கடவுளோடு நேராக உறவு வைத்துக் கொள்ளுகின்றான்.

ஒருவன் ஒரு வீட்டைக் கட்ட ஆரம்பிக்கும் போது சாரம் போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வீடுகட்டி முடிந்துவிட்டால் சாரத்தைத் தேடுபவர்கள் யாருமில்லை. அது போல நாம் ஈஸ்வரத்தியானம் பழகும்போது நமக்குப் பல சாதனங்கள் தேவை. ஈஸ்வரனை அடைந்து விட்டால் பின்பு மற்றக்கிரியைகள் யாவும் தானே ஓய்ந்து விடும்.

பசுவினிடமுள்ள பாலானது உண்மையில் அதன் உடல் முழுவதும் இரத்தரூபமாய் பரவியுள்ளது. ஆனாலும் அப்பசுவின் காதுகளையோ கொம்புகளையோ பிசைந்தால் பால்வராது. அதன் முலைக்காம்புகளைப் பிடித்துக்கறக்க வேண்டும்! இதேபோல ஈஸ்வரன் இந்த உலகத்தில் எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறான்! ஆயினும் எல்லா இடத்திலும் அவனை உன்னால் காணமுடியாது. பூர்வ பக்தர்களுடைய குணவிசேடம் நிரம்பிய புண்ணிய தலங்களாகிய கோவில்களில் தான் அவர் சுலபமாய் தென்படுகிறார்.

○

ஆத்மசாதன அபிவிருத்திக்கு அவசியமானவைகளில் சத் சங்கம் ஒன்றாகும்.

ஒருவன் சிரமப்பட்டு விறகும் பிறவும் தேடி நெருப்பு உண்டாக்குகின்றான்! அதன் உதவியால்பலர் குளிர் காய்கின்றனர். அதேபோலமிகவும் சிரமப்பட்டுத் தவம் செய்து பகவானை அடைந்த மகான்களோடு பழகுவதால் பலர் பகவானிடத்தில் சுலபமாக மனத்தை வைக்கமுடிகின்றது.

அப்புக்காத்தைக் காணும் போது வழக்குகளும் நியாயஸ்தலங்களுமே ஞாபகத்திற்கு வரும். அதுபோல பக்தனைக் காணும்போது கடவுளையும் மகான்களையுமே நினைக்கின்றோம்.

நெருப்பில் போடப்பட்ட ஈரவிறகும் சீக்கிரத்தில் உலர்ந்து எரியத் தொடங்குகிற . அதுபோலவேசாதுசங்கமானது உலகப்பற்றுள்ள மக்களின் மனத்திலுள்ள காமமும் ஆசையுமாகிய ஈரப்பசையை வற்றச் செய்கிறது. அதன்பின்

(10-ம் பக்கம் பார்க்க)

பண்டிகையும் படமாளிகையும்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சளிச் சளிச் என்று ஏதோ மிதிபட்டது. தெரியும் தானே என்னென்று? எனக்கும் தெரியும்தான். வாயை மூடிக்கொண்டு போய் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டேன்.

பீடிப்புகை மூடுபனி போல் தொங்கிக் கொண்டிருந்தது. எனக்கு வலதுபுறத்தில் இருந்தவர் திடீரென்று இடியேறு போல ஏப்பம்விட்டார். புளிச்சல் கள்ளின் வாடை அதில் வீசியது. மறுபக்கம் மூஞ்சியைத் திருப்பினேன். இடதுபுறத்தில்இருந்தவரின் வியர்வையில் சாராய வெடில் பொக்கென்று அடித்தது. இருவரும் நிமிடத்துக்கொருதடவை தாராளமாகக் காறித் துப்பிக்கொண்டிருந்தார்கள். மூட்டைப்பூச்சிகள் கணத்துக்கொருதடவை இன்ஜெக்ஷன் போட்டுக்கொண்டேயிருந்தன. இத்தனை பக்கவாத்தியங்களோடு படம் ஆரம்பித்தது.

முன்சீட்டிலிருந்தவாலிபர் ஒருவர் உடனே நேர்முகவர்ணனை ஒன்றை ஆரம்பித்துவிட்டார். 'இந்தப் பொடியன் தான் பேந்து சிவாஜியாய் வாறான். இஞ்சாய், இவன்தான் வில்லன் கண்டியோ! ...சரோஜாதேவியை இவன் களவெடுத்துக் கொண்டுபோய் ஒரு வெண்கலக்கடைக்குள்ளை ஒளிச்சுவைச்சிருப்பான்... அப்பதான் வருவான் சிவாஜி, வெண்கலக் கடைக்குள்ளை கரடிபுகுந்தமாதிரி...'

'கரடியல்லடாப்பா' யானை.

'ஓ, யானை, யானை ...பேந்து நடக்கும் ஒரு 'பைட்!' சூ!'

'சீ, சிவாஜிக்கு என்ன பைட் தெரியும்? அதுக்கு எம். ஜி. ஆர். தான்!'

'எம். ஜி. ஆருக்கு மண்ணாங்கட்டி தெரியும். சின்னப்பா தேவர் தானடா, உவங்களுக்கெல்லாம் பைட் பழக்கிறது' —இது ஒரு மூன்றாம் குரல்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு நான் படத்தைரஸித்துக்கொண்டிருந்தபோது திரையிலும் ஏதோ வாக்குவாதம் நடப்பது போலத் தெரிந்தது, உடனே நாலைந்து ரஸிகமகாஜனங்கள் 'உஸ், உஸ்' என்று மௌனமாயிருக்கும்படி வற்புறுத்தினார்கள். அதே சமயம் இரண்டாம் கிளாஸ்பக்கமாக ஒரு குழந்தை 'வீல், வீல்' என்று கத்தியது. நாங்கள் எல்லோரும் அதன் தாயை முறைத்துப்பார்த்தோம்.

பளிச்சென்று மண்டபத்தில் வெளிச்சம் வந்தது. இடைவேளை.

எனக்கருகிலிருந்த சாராயம், சிகரெட் பற்றுவதற்காக நெருப்புப்பெட்டிதரும்படி 'கள்ளுவண்டிலை'க்கேட்டது. கள்ளு வண்டிலிடம் நெருப்புப் பெட்டி இல்லாதபடியினால்அதுதான்புகைத்துக்கொண்டிருந்த சுருட்டில் நெருப்பு எடுக்கும்படி சாராயத்திடம் சொன்னது. இருவரும் குனிந்து என்னுடைய மடிக்குமேலேநெருப்பு பற்ற வைத்தனர். கள்ளுவண்டில், சிகரெட்டின் முனையென்று நினைத்துக் கொண்டு சாராயத்தின் மூக்குத்துவாரத்துக்குள் சுருட்டைத்திணிக்க சாராயம் பதைபதைத்து சுருட்டைத் தட்டிவிட, இரண்டுதீப்பொறிகள்எனது தீபாவளிச் சால்வையில் விழுந்து இரண்டு பெரிய துவாரங்களை உற்பத்தியாக்கிவிட்டது. நான் யாரொடு நோவேன், யார்க்கெடுத்துரைப்பேன். மலையே வா, தலையே சும என்றிருந்துவிட்டேன்.

திடீரென்று பெரிய விசிலடிப்பும் கைதட்டலும் கலரியின் ஒரு பக்கத்திலிருந்து கிளம்பின. 'எம். ஜி. ஆர். நடித்த 'வீரசூர வெடிகுண்டன், விரைவில் வருகிறது' என்று திரையில் காட்டிக்கொண்டிருந்தார்கள். அடுத்த நிமிடம் ஒரு ஸ்லைட் மாறி 'சிவாஜியின் இரத்தக் கோளாறு' வந்துகொண்டிருக்கிறது' என்றுதிரைசொல்லியது. உடனே கலரியின் மறுபக்கத்திலிருந்து விசிலடிப்பும் கைதட்டலும் எழுந்தது. சிவாஜீ விசிறிகள், எம். ஜீ. ஆர். விசிறிகள் மீது பல்லைக்காட்டின. சில முற்றின விசிறிகள் வாழைப்பழத்தோல்களால் அஸ்திரப்பிரயோகம் செய்தன. மறுபடியும் படம் ஆரம்பித்தது.

கள்ளுவண்டில் மெல்ல மெல்லவாக என்னுடைய தோளை தலையணையாகப் பாவிக்க முற்பட்டது. நான் தயக்கத்தோடு அந்தத் தலையைத்தூக்கி மறுபக்கம்புரட்டிவிட்டேன். நல்லமனதோடு செய்யப்போனஅந்த உதவி எனக்கே தீமையாக வருமென்றுநான் கனவிலும் நினைக்கவில்லை.

'ஓய், என்ன காணும் தள்ளுறீர்?' என்றது அந்தத்தலை.

நான் விளங்கப்படுத்துவதற்குமுன்னமேயே அது 'விக் விக்' என்று விக்கல் எடுக்க ஆரம்பித்துவிட்டது. தலை டக்கென்று கீழே குனிந்தது. சூடான ஏதோ திரவபதார்த்தம் என்கால்களைத் தோய்த்தது. தாங்கமுடியாத துர்நாற்றம் என்னுடைய நாசியைத் தாக்கியது.

அதற்கு மேலும் படம் பார்த்துக்கொண்டிருக்க நான் என்ன விசரனா? விர்ரென்று எழுந்து வெளியே வந்துவிட்டேன்.

'ஆமாம், என்ன படம் ஐயா? எப்படியிருந்தது?

'பொறுங்கோ, சாமி. அதுக்குள் ஒரு பக்கம். குடையையல்லவா மண்டபத்துக்குள் வைத்துவிட்டுவந்திட்டேன்!

உலகமேடை

டி. எம். எம்

நியூயோர்க் மேயர்

இம்முறை நியூயோர்க் மேயராக ஜோன் வி. லிண்ட்ஸே தெரிவு செய்யப்பட்டவுடன், அது உலகச் செய்தியாகிவிட்டது. ஏனெனில், குடியரசு எம். பி. யான லிண்ட்ஸே, ஜனநாயகக்கட்சியின் கோட்டையான இந்த மாபெரும் நகரத்தை வெற்றிகொண்டதே அதற்குக் காரணம். 80 லட்சம் மக்கள் வாழும் நியூயோர்க்கை கடந்த 20 ஆண்டுகளாக ஜனநாயகக் கட்சியினரே பரிபாலித்து வந்தார்கள். வாக்காளர்களில் முக்கால்வாசிக்கு மேற்பட்டோர் அந்தக்கட்சியைச் சேந்தவர்களே. இருந்தும் ஜனதிபதி ஜோன்ஸனுல் ஆதரிக்கப்பட்ட அபேட்சகர் (ஏப்ரஹாம் டி. பீம் ஜனநாயகக்கட்சி) தோல்வியுற்றதேன்? ஜோன்ஸனின் வெளிநாட்டுக் கொள்கைக்கு - குறிப்பாக வியட்னும் கொள்கைக்கு இது ஒரு சவாலா?

எதுவாயினும் இந்தத் தேர்தல் மகா முக்கியமானது. ஜனதிபதிதேர்தலுக்கு அடுத்தமுக்கிய தேர்தல்களில் இதுவும் ஒன்று.

லிண்ட்ஸே, பீம் ஆகிய இருவருடன் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த வில்லியம் எப் பக்லியும் மூன்ருவது அபேட்சகராகப் போட்டியிட்டார். ஆனல் முதல் இருவருக்குமிடையே நடைபெற்ற மோதல் கடந்த கால்நூற்ருண்டு அமெரிக்க சரித்திரத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு நேரடிப்போட்டியாகும். புதிய மேயர் குடியரசுவாதியாய் இருந்தாலும் கோல்ட்வாட்டரைப் போல் தீவிரவலது சாரியல்ல. உண்மையில், ஜனதிபதி தேர்தலில் கோல்ட்வாட்டர் ஜனநாயகக்கட்சி அபேட்சகராக நியமிக்கப்படுவதை அவர் வன்மையாக எதிர்த்தவர்.

43 வயதான லிண்ட்ஸே மேயராக வெற்றிபெற்றவுடன், அவரதுபெயர் அடுத்த ஜனதிபதிக்கான அபேட்சகராக படபடவென அடிபட ஆரம்பித்துவிட்டது. சரிந்து விழுந்த குடியரசுக் கட்சிக்கு சரியான புதிய ஓர் தலைவர் கிடைத்துவிட்டார் என சில வட்டாரங்கள் கருதவும் ஆரம்பித்துவிட்டன. தனது மகத்தான வெற்றியினுல் குடியரசுக்கட்சியை அவர் கோல்ட்வாட்டரின் பிடியிலிருந்து இழுத்துச் சென்றுவிட்டார் என்றும் கருதலாம்.

திரு. லிண்ட்ஸேயின் கருத்துக்கள், சென்றதேர்தலில் கோல்ட்வாட்டரைக் கைவிட்ட லட்சக்கணக்கான குடியரசுவாதிகளைக் கவர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அநேக நகர மேயர் தேர்தல்களில் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றுவந்த அதே சமயம், லிண்ட்ஸே நியூயோர்க்கை வென்ற செய்தி வெளியிடப்பட்டது. இதை ஒரு அரசியல் அற்புதமாகவும் வருணிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

நியூயோர்க் மேயர் பதவி சாமான்யமானதல்ல. இட்டத்தட்ட ஒரு கோடிப் பேர் வாழும் இந்த ராட்சஸ நகரத்தின் வரவு செலவு பட்ஜட், அநேக சுதந்திரநாடுகளின் பட்ஜட்டை விடப்பெரியது. வாஷிங்டனில் ஜனதிபதி வரவேற்கும் அத்தனை பிரமுகர்களையும், அநேகமாக நியூயோர்க் மேயரும் உபசரிக்கிருர் என்பதிலிருந்தே அதன் முக்கியத்துவத்தை உணரலாம்.

அமெரிக்க ராஜ்யங்களில் நியூயோர்க் ராஜ்யம் அதிக முக்கியத்துவமும், வருமானமும் உடையது. உலக நகரங்களில் நியூயோர்க் நகருக்கே அதிக வருமானம் உண்டு. எனவே நியூயோர்க் ராஜ்ய கவர்னர், அல்லது நியூயோர்க் நகரமேயர் ஜனதிபதி பதவிக்கு நிற்கக்கூடிய ஒரு அந்தஸ்தைப்பெற முடியும். பல நியூயோர்க் கவர்னர்கள் ஜனதிபதிகளாகியிருக்கிருர்கள். தற்போதைய குடியசுக்கட்சியின் நிலையில், நியோர்க் நகர மேயருக்கு அத்தகைய அந்தஸ்து ஏற்பட்டிருக்கிறது எனலாம்.

நியூயோர்க் நகரம் ஐந்து பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கிறது. நியூயோர்க் ராஜ்ய கவர்னருக்கு வருடச் சம்பளம் 50,000 டாலர்கள் என்றால், நகரமேயருக்கும் அதே சம்பளம்தான். நகரசபையின் கண்ட்ரோலருக்கு 40,000 டாலர்கள் சபையின் தலைவருக்கு 35,000 டாலர் சம்பளம். அதுமட்டுமா? 5 பிரிவுகளின் தலைவர்களுக்கும் தலா 35,000 டாலர் சம்பளம். நகரசபை அங்கத்தினர்களுக்கு, எல்லாமாக தலா 13,000 டாலர் வருடச் சம்பளம்.

மன்ஹாட்டன், புரோன்ஸ், புருக்ளின், குயின்ஸ், ரிச்மண்ட் என்பன இந்தஐந்து பிரிவுகளுமாகும். நியூயோர்க் ராஜ்யத்தின் வருமானத்தைவிட நியூயோர்க் நகரின் வருமானம் அதிகம். வருடம் 1500 கோடி ரூபாய் அதன்பட்ஜட் வரவு. (இவற்றில் போக்குவரத்து சேர்க்கப்படவில்லை. அதன் பொருளாதாரமும் பிரம்மாண்டமானது). 5 நகரப் பிரிவுகளுக்குமிடையிலுள்ள நீர் நிலைகளைத் தவிர்த்துநகரின் நிலப்பரப்பு மட்டும் சுமார் 320 சதுர மைல். நியூயோர்க் நிர்வாகம் ஒரு பெரிய அரசாங்க நிர்வாகத்தைப் போன்றது.

இந்தச்சிறிய விபரங்களிலிருந்தே நிர்வாக அதிகாரியான மேயர்பதவி எவ்வளவு பெரியது, முக்கியமானது என்பது விளங்கும்.

இக்கட்டத்தில் அமெரிக்காவின் புதிய தலைவர்களில் ஒருவராக உருவெடுத்திருக்கும் லிண்ட்ஸேயைப்பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்கும்.

தோற்றத்தில் "குடியரசுக்கட்சியின் கென்னடி" என லிண்ட்ஸே கருதப்படுகிருர். 6 அடி 3 அங்குலம் உயர்ந்து, நீலக்கண்களுடன் வசீகரமாகக் காணப்படும் அவருக்கு 43வயது தான்ஆகிறது. தேர்தல் பிரசாரத்தில் கெட்டிக்காரர். 5 மாதங்கள் 473 மைல் அவர் நியூயோர்க்கில் கால்நடையாகச்சென்று தளரா ஊக்கத்துடன் பிரசாரம் செய்தார். 4 ஜோடி சப்பாத்துக்கள் இதனுல் தேய்ந்தனவாம். குடியரசுக் கட்சியின் பிரகாசமான நட்சத்திரமாகக் கணிக்கப்படும் லிண்ட்ஸே, பெரியவிளையாட்டுப்பிரியர். பலவிளையாட்டுக்களில் நாட்டமுடையவர். குதிரைச்சவாரி, நீச்சல், பனிச்சறுக்கல், படகு செலுத்துதல், பந்தெறிதல் ஆகியவற்றில் ஈடுபட்டவர்.

உதைபந்தாட்டம், பேஸ்பால் உட்பட இன்னும் பல விளையாட்டுக்களுக்கும் சைக்கிளில் சென்று பார்ப்பாராம். யேல் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியானபின் கென்னடியைப் போலவே கடற்படையில் மூன்ருண்டு சேவை செய்தவர். பின் சட்டம் பயின்று வழக்கறிஞரான லிண்ட்ஸே, 1952-ல் தீவிர அரசியலில் இறங்கிஞர்.

நியூயோர்க் மேயர் என்ற வகையில் அவருக்கு மாதம் சுமார் 20,000 ரூபாய் சம்பளம். இது தவிர உத்தியோக ரீதியான மாளிகையும், லிமோஸின் காரும், மெய்ப்பாது காவலர்களும், இதர பல சிப்பந்திகளும் உண்டு.

வருங்கால அமெரிக்கத் தலைவராகச் சந்தர்ப்பம் பெற்ற லிண்ட்ஸேக்கு இவ்வளவு அறிமுகம் போதும்.

அமெரிக்கர்களுக்குப் புராதன நாகரிகம் எதுவுமில்லை. புதிய உலகமான அமெரிக்காவுக்கு, நவநாகரிகம்தான் பெருமையளிக்கிறது. அவர்களின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவைகளில் நியூயோர்க் நகரமும் ஒன்று. எனவே திரு. லிண்ட்ஸே நியுயோர்க்கிலிருந்து ஒருநாள் வாஷிங்டன் வெள்ளைமாளிகையில் பிரவேசிக்கக்கூடும்என பல குடியரசுவாதிகள் விரும்பினுல் அதில் ஆச்சரியமில்லை.

★

சார்லி சாப்ளின்

சார்ளி சாப்ளினின் பெயர் சமீபத்தில் பலமாக அடிபட ஆரம்பித்திருக்கிறது. ஏற்கனவே அவர் உலகப் புகழ் பெற்ற ஹாஸ்யநடிகர் எனப் பெயரெடுத்தவர். இந்நூற்ருண்டின் இணையற்றஹாஸ்ய மன்னர் என்றும் அவரைக் கூறுவார்கள். இப்போது அவருக்கு ஏற்பட்டபெயர் "புத்திர பாக்கியங்களி"னுல் கிடைத்ததாகும்.

சாப்ளின் தனது வாழ்க்கையிலும், தனது துறையிலும் மகத்தான வெற்றி பெற்றிருக்கிருர். ஆனுல் புத்திர பாக்கியங்கள் அவருக்குப் பொருத்தமாயில்லை. அவரது 19 வயதுப் புதல்வன் மைக்கேல், தந்தை சொல்லைக் கேட்பதில்லை. மற்ருேர் 10 வயதுப்பையன் சமீபத்தில் ஏதோ ஒரு நூலை எழுதி, அது நீதிமன்ற விவகாரமாயிற்று.

சாப்ளின் தனது மகனை சில காலத்திற்கு முன் கைவிட்டுவிட்டார். அதாவது கவனிப்பதில்லை. தந்தை சொல் தாண்டும் புதல்வன் என்பதேஇதற்குக்காரணம். தந்தையைப்போலவே நடிப்புத்துறையில் ஈடுபாடு கொண்ட அவனுக்கு, தற்போது தான் எடுக்கவிருக்கும் படத்தில் இடம்கொடுக்கவும் சாப்ளின் விரும்பவில்லை எனக் கூறப்படுகிறது.

தந்தை-தனயன் தகராறைத் தீர்த்துவைக்க பலகோடி "இளசு"களின் உள்ளங்கவர்ந்த சோபியா லோரன் லண்டன் வருகிருர். திரு. சாப்ளினுடன் சேர்ந்து அவர் கூட்டாக ஒரு திரைப்படம் தயாரிக்கவிருக்கிருர். அதே சமயம், இந்தக்குடும்பத் தகராறைத் தீர்த்து வைக்கவும் அவர் முனையப்போவதாய்க் கூறப்படுகிறது. பலகோடி 'இளசு'களில் மைக்கேலும் ஒருவனுய் இருப்பதால் லோரனின் சமரச முயற்சி வெற்றிபெற வாய்ப்புண்டு.

சார்ளி சாப்ளின் ஹாஸ்ய உலகில், பல்லாண்டு சிரஞ்சீவியாக வாழ்ந்துவருகிருர். அவரது ஹாஸ்யம் கருத்துச்செறிவு கொண்டதாய் இருப்பதே இதற்குக் காரணம். சமுதாய ஊழல்களைப் பல படங்களில் அவர் அற்புதமாகச் சித்தரித்து, பல அரசாங்கங்களின் விருப்பு வெறுப்புக்கும் ஆளாகியிருக்கிருர். திரைஉலகில் மட்டுமின்றி, வெளியிலும் பல உலகப்பிரமுகர்கள்அவருக்கு நண்பர்கள். காலஞ்சென்ற நேருவும் அவர்களில்ஒருவர்.

சில ஆண்டுகளுக்கு முன் அவர் தயாரித்த(கிரேட் டிக்டேட்டர்) "மகா சர்வாதிகாரி" என்றபடம் பலரைக் கவர்ந்தது. ஹிட்லரின்வாழ்க்கையில் சில அம்சங்களைச் சித்தரிக்கும் படம்அது. சிந்தனைக்கும்கருத்துக்கும்ஒருவிருந்து அது. சாப்ளினுக்கு இப்போது76வயது பணமும், புகழும்பெற்ற அவர், இப்போது அந்திய காலவாழ்வில் பிரவேசித்திருக்கிருர். குடும்பப் பிரச்னை அவரது அமைதியைக்கெடுத்து வருவதாகத் தெரிகிறது. சாப்ளினைத் தேடிவரும் சோபியா, இதற்குப்பரிகாரம் காண்பார் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

தித்திப்பு

★ இந்தியாவிலேமலிவுப்பதிப்புக்காலம்என ஒன்று இருந்ததல்லவா? அரிய பெரிய நூல்களெல்லாம் குறைந்த விலைக்குப் பெறக்கூடியனவாக இருந்தன. அதே காலத்தில் இலங்கையிலும் ஒரு மலிவுப் பதிப்பு நூல் வெளிவந்தது. நூலின் பெயர்: 'திருக்குறள்பொழிப்புரை'. வெளியிட்டவர்: வரதர்.

★ பெண்ணுகப்பட்டவள் ஒன்று காதலிப்பாள்; அல்லது வெறுப்பாள். இதற்கு மத்திய நிலையே அவளுக்குத் தெரியாது.

—டிரைன்ஸ்

★ உலக சிறுகதை எழுத்தாளர் வரிசையிலே சேர்க்கக் கூடிய ஒருவர் இலங்கையிலே இருக்கிருர். அவர்தான் உடுப்பிட்டியைச் சேர்ந்த அழகு சுப்பிரமணியம். இங்கிலாந்திலே பத்து வருடத்துக்குமேலாக வாழ்ந்து, ஆங்கில சிறுகதையுலகிலே தனி இடத்தைப் பிடித்துக் கொண்ட இவர் ஒரு பாரிஸ்டர். இவர் எழுதிய 'சிங்கப்பூர் பென்ஷனியர்' என்ற ஆங்கிலச் சிறுகதை பதின்மூன்று மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

★ மலாயாவில் 'சகாயி' என்ருெரு சாதியினர் தங்கள் பெண்ணை இருவர் காதலிக்கிருர்கள் என்று தெரியவந்தால், உடனே காதலிக்கும் அவ்விருவர்களையும் சண்டைக்கு விடுவார்களாம்! அந்த இரு வாலிபர்களும் தங்கள் 'காதலிக்காக' மும்முரமாகச் சண்டையிட்டுக்கொள்வார்கள். முடிவில் ஒருவன் இறந்துவிடுவான். வெற்றிபெற்றவனை காதலி அன்புடன் அழைத்துச் செல்வாளாம்.

★ சேர் பொன்னம்பலம் இராமநாதன் வீதி, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, குமாரசுவாமிப் புலவர் வீதி, டி. ஸி. ராஜரத்தினம் வீதி, முகாந்திரம் நாராயணர் வீதி, சரவணமுத்து வீதி...இதெல்லாம் என்ன எங்கேஎன்று கேட்கிறீர்களா? யாழ்ப்பாணம்— காங்கேசன்துறை பெருந்தெரு மார்க்கமாகப் போனுல் இப்பெயர்கள் உங்கள் கண்ணில் தென்படும். தேசிய தமிழ் பெரியோரைக் கனம் பண்ணும் இதுமாதிரி 'நற்சிந்தனை' நம்மவர்கள் சிந்தையில் இன்னும் வெறும் கற்பனையாகவே இருந்துவிடவில்லை என்பதற்கு இது ஒரு சான்று. அத்துடன்யாழ்ப்பாணத்தில் 25ஆண்டு காலம்நடைபெற்று மறைந்துபோன தேசிய(த்)தமிழ் வார ஏடு என்பதற்கு இப்பொழுது அர்த்தமும் புரிகிறதல்லவா?

★ "ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்களில் 100-க்கு 50 பேர் தமக்கு கணவன் அல்லது மனைவி தேடுவதற்காகவே படிக்கிருர்கள்" — பிரிட்டிஷ் பத்திரிகையொன்றுதான் மேற்படி தகவலை வெளியிட்டது.

★ தமிழா! உனக்குத் தமிழன்புபோதாது! தமிழ் வெறி பிடிக்கவேண்டும்! தமிழ்க்கனல் உன் உள்ளத்திலே ஏறவேண்டும்! அக்கனலைக் கொண்டு தமிழர்க்கு நேரும் தீமைகளையெல்லாம் பொசுக்கி எறியவேண்டும். அக்கனலிலே தமிழ்த்தங்கத்தைப் போட்டுஉருக்கி—இன்னும் மாற்றேற்றி, நமது சமுதாய தேவிக்கு வெற்றித் திருமுடி செய்தணிவிக்க வேண்டும். தமிழா, விழித்துக்கொள்!

—சுத்தானந்த பாரதியார்

ஒருமணி நேரத்தில் ஏழரைக்கோடி விரயம்!

★ மனிதகுலம் அழிவதைத் தடுக்க, மானிடம் தழைக்க கூட்டுசேராக் கொள்கையே சிறந்தது. ஏனெனில் கூட்டுச்சேர்ந்த நாடுகள் அனைத்தும் யுத்தபீதி நிலவுவதற்கே காரணமாக இருந்து அதன்மூலம் மக்கள் துன்புறவும் உயிரினம் அழிக்கப்படவும் வழி செய்கின்றன. அணு மற்றும் இதர ஆயுத உற்பத்திக்காகச் செலழிக்கப்படும் தொகை ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன், அமெரிக்க நாடுகளின் மொத்த தேசிய வருமானத்திலும் மிக அதிகமான தொகையாகும். ஒவ்வொரு வருடமும்14000கோடி டாலரை (சுமார் 70, 000 கோடி ரூபாவை) போர்க் கருவி உற்பத்திக்காக உலக நாடுகள் வீண் விரயம் செய்கின்றன. அதாவது நாள் ஒன்றுக்கு 200 கோடி ரூபா - மணி ஒன்றுக்கு 7 1/2 கோடி ரூபா இவ்வாறு தீயசக்தி அணுக்களில் பயன்படுத்தப்படுகிறது.

—பெட்ரண்டு ரசல்

தொகுப்பு: ஈ. கே. ஆர்.

நட்சத்திரம்

- சாரணகையூம் -

நட்சத் திரமே,
நட்சத் திரமே
நினைப்ப தென்னவோ?
கிட்ட வந்து போவ
தாலே
நட்ட மென்னவோ?
வட்ட நிலவை வளைத்து
நிற்கும்
வேட மென்னவோ?
கட்டவிழ்ந்த மொட்டு
போல,
களிப்ப தென்னவோ?
வெட்டவெளி வான்
முகட்டின்
வெள்ளிப் பந்தலோ!
திட்ட மிட்டு இறைவன்
செய்த
தீபக் கற்களோ!
யார் வெறுத்த போதும்
உன்னை
யான் மறவேனே!
நாள் முழுதும் உன்னை
என்றன்
நாவால் பாடுவேன்

நாய்வால்

- ச. வே. பஞ்சாட்சரம் -

துணிந்த நாயைக்
கண்டுவிட்டால்
துவண்டு சோரும்
நாய்வால்
பணிந்த நாயைக்
கண்டுவிட்டால்
பாய்ந்தெ ழும்பும்
நாய்வால்
ஈன்றுவிட்ட தாயைக்
கண்டும்
எழுந்த சையா
நாய்வால்
தீன் கொடுக்கும்
விட்டவர்க்கோ
நன்றி செப்பும்
நாய்வால்!
நிரந்த ரமாய் நெளிவு
நீங்கி
நின்றி டாத நாய்வால்
வரும்ப டிக்காய் நாய்
சுடுவோர்
மகிழ்ந்து வெட்டும்
நாய்வால்!

சிறுவர் தொடர்கதை

கீதா விலாஸ்

கு. ராதா ரமணன்

(4)

ரமேஷ் மூர்ச்சை தெளிந்தபோது அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தலை சுற்றியது. கண்களைப் பல முறை கசக்கிவிட்டுக்கொண்டான். காணும் காட்சிகளில் எவ்வித மாற்றமுமேயில்லை.

அவனிருந்த இடம் ஒரு மாபெரும் அரண்மனைக் கூடத்தின படுக்கை அறை. சற்றுத்தலையை உயர்த்தி மேலே பார்த்தான். எங்கும் ஒரே ஜோடனை. பார்வை சற்று விலகி கூடத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூண்களில் பதிகிறது.

தங்கம்!

ஆமாம், அவ்வளவும் தங்கக் கட்டிகளால் ஆன தூண்கள்! அவற்றிலே கண்ணைப் பறிக்கும் வைரங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பதிக்கப்பட்டிருக்கின்றன.

'ஒருவேளை நான் காண்பது கனவாக இருக்குமோ?'

ரமேஷ் தனது தொடைகளை கிள்ளிப் பார்த்துக் கொள்கிறான்.

சந்தேகமேயில்லை! அவன் இருக்குமிடம் ஓர் அரண்மனைதான்! ஏதோ நடக்கக்கூடாத காரியம் ஒன்று நடந்துவிட்டதுபோல் அவன் உள்ளம் உணர்ந்தது!

சிறிதுநேரம் சிந்தித்துப் பார்த்தான். எப்படியாவது எழுந்துதானே ஆகவேண்டும்! தன் மனதில் துணிவை வரவழைத்துக் கொண்டே ரமேஷ் அப்படுக்கை அறையைவிட்டு வெளியேறுவது என்ற முடிவுடன்தான் படுத்திருந்த கட்டிலைப் பார்த்தான். அப்பப்பா! என்ன ஆச்சரியம்!

கட்டில் பூராவுமே பட்டுப் பீதாம்பரங்கள் விரிக்கப்பட்டிருந்தது. கட்டிலின் மேலே விரிக்கப்பட்டிருந்த தங்கச் சருகைகளால் ஆன சேலை அவனைப்பிரமிப்பில் ஆழ்த்தியது.

மெதுவாகக் கட்டிலைவிட்டு காலை எடுத்து வைத்தான். அவ்வளவுதான், அங்கிருந்த மணிகள் யாவும் கணகண

வென ஒலிக்கத் தொடங்கின! அதை அடுத்துப் பல பெண்கள் உள்ளே ஓடிவந்தார்கள். அத்தனை பேருமே கடற்கன்னிகள்.

ரமேஷுக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது! இதுவரை காலமும் அவன் கதைகளில் படித்தும் சித்திரங்களில் கண்டுமிருந்த கடற்கன்னிகள் இப்போது அவன் கண் முன் தோன்றுகிறார்களே!

சாதாரண பெண்களைப் போல் இருந்தாலும், கால்கள் இல்லை. அவற்றிற்குப் பதிலாக மீனின் வாலை ஒத்த ஓர் அவயவம் இருந்தது! அவர்கள் அந்த அவயவத்தை நிலத்தில் தேய்த்தும் சில கணக் காற்றில் அடித்தும் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்க வஸ்திரம் அணிந்திருந்தனர். அவர்களிலே ஒருத்தி கூடத்தின் அருகே இருந்த வீணையை எடுத்து மீட்டத்

தொடங்குகிருன். அவ்விசைக்கு ஏற்ப இன்னுமொரு கன்னி பாடுகிருள். மற்றையோர் நடனமாடுகிறார்கள்...

மிகவும் இனிமையாக இருக்கிறது!! சுமார் பத்து நிமிடங்களுக்குப் பின்னர் பாடல் முடிந்தது.

பாடல் முடிந்ததும் கிரீடம் அணிந்திருந்த கடற்கன்னி ரமேஷை நோக்கி புன்னகையுடன் நடந்துவந்தாள்.

''வணக்கம் மன்னு! நான் தான் ரிஷபசாம்ராஜ்யத்தின் போர்த்தளபதி!''

என்ன ஆச்சரியம்? ரமேஷ் எப்போது மன்னனாக்கப்பட்டான்?

''நீ சொல்வதொன்றும் எனக்குப் புரியவில்லையே!''

''ஆச்சரியப்படாதீர்கள் பிரபு! நீங்கள்தான் இச்சிற்றரசினது மன்னர்!''

''என்ன தளபதி, உங்கள் எல்லோருக்கும் பைத்தியமா பிடித்துவிட்டது?''

இதைக் கேட்டதும் தளபதி கலகலவெனச் சிரித்தாள். பின்னர் தொண்டையைக் கனைத்துக் கொண்டே பேசத்தொடங்கினள்.

''மன்னு! நாங்கள் ஏற்கனவே கூறியது போல் நாங்கள் தான் ரிஷபசிற்றரசின் மன்னன்!''

''ரிஷபசிற்றரசா?''

''ஆம்! எமது கடற்கன்னிகளின் உலகிலே மொத்தமாக ஒன்பது சிற்றரசுகள் இருக்கின்றன. ஒவ்வோர் சிற்றரசும் ஒவ்வோர் கிரகத்தின் பெயரைக்கொண்டிருக்கிறது!''

''இவற்றிற்கெல்லாம் ஒரு தலைமைப்பீடமில்லையா?''

''இருக்கிறது மன்னு... ஒரு காலத்தில் நம் சிற்றரசு தான் பேரரசாய்த்திகழ்ந்தது! உம்.ாம்! நடந்ததைஎண்ணி என்ன பயன்?''

''சொல்லுபவற்றை எல்லாம் சற்று விபரமாகச் சொல்லு...!''-ரமேஷ், மன்னன் என்ற தொனியில்தான் பேசினன்.

(தொடரும்)

உங்களுக்குத் தெரியுமா?

1. ஓர் இறாத்தல் தேன் சேகரிக்க எத்தனை தேனீக்கள் வேலைசெய்யவேண்டும்?

2. கண் தெரியாத எந்தப் பூச்சி உயர்ந்த வீடு கட்டுகிறது?

3. கறையானில் எத்தனை இனங்கள் உண்டு?

4. குளிர்ந்த இரத்தமுள்ள உயிர்கள் எவை?

5. சிலந்தி வலையைக் கொண்டு மீன்பிடிக்கலாமா?

6. தும்பிகளால் மனிதனுக்கு நன்மை உண்டா?

7. மிக நீளமான மண்புழு எங்கே உண்டு?

8. ஒரு நத்தை ஊர்ந்து செல்லக் கூடிய வேகம் என்ன?

9. கடற் பஞ்சில் ஆண், பெண் வகைகள் உண்டா?

அனுப்பியவர்:
சா. மைக்கல்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

விடைகளை 3ம் கலம் பார்க்க.

உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. 37,000 தேனீக்கள். 2. கறையான். 3. 1600 இனங்கள். 4. நீரிலும், நிலத்திலும் வாழுமுயிர்கள், ஊர்வன. 5. ஆம். ஆஸ்திரேலியாவில் மீன் பிடிக்கிறார்கள். 6. ஆம், கொசுக்களைப் பிடித்து உண்ணுகிறது. 7. ஆஸ்திரேலியா. 8. 2 அங். 1 நிமிடத்தில். 9. உண்டு.

நயினையம்பதி தந்த புலவர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யராவர்'' என்றும் பாராட்டும் இடத்து இவரது தேசபக்தி மாசுமறையின்றித் திகழ்கிறது.

இலங்கைமணித் திருநாட்டில் ஆங்கிலேயர் ஆள்வதை எதிர்த்தகவிஞன் ''அரியிருந்தாண்ட அரியணை மீது டின் நரியிருந் தாளுதடி'' என்று ஏளனம் செய்து ''காமினிநித்திரைகொண்ட பொற் கட்டிலில் அன்று பேயரசாளிற் பிணந்தின்னும்'' என்றபடி அமைந்த சித்தாந்தம்ஆட்சிபுரிந்ததை ஆத்திரத்துடன்எதிர்த்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீது குருவாகிய பாரதியின் சீற்றத்துக்கு இம்மியளவும் குறையாத தரத்துடன் பாரதியடியான் பாடியுள்ளார். ஒரு நாட்டின் சுதந்திரத்தின் மூலவேர் வர்த்தகமாகும். வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயர் வர்த்தக வலை விரித்து அடிமை கொண்ட நிகழ்ச்சியை நினைவூட்டும்வகையில் ''கயவாகு மன்னன் பண்டங்களேற்றிய கப்பல் கவிழ்ந்ததடி'' என்று பாடியுள்ளார். ''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்'' என்றுபாடிய பாரதி மரபில் நின்று, இலங்கைத் தீவின் விவசாய நலத்திற்குப் பயன்படுத்தப்படாது கடலை நோக்கிஓடும் ஆறுகளை அணைகட்டத்தவறியதை அடிமை வாழ்வின் அம்சமாகக் கருதிய பாரதியடியான் ''ஆறுகள் யாவும் அணைப்பவரின்றி அழுதழுதோடுதடி- கடல்விழ அழுதழுதோடுதடி'' என்று இரங்கிப் பாடுகிறார். செல்வத்தைச் சூறையாடி இலங்கை நாட்டின் வளத்தைக் கொள்ளை கொண்டு போகும் வெள்ளையர்களை எவரும் விளங்கிக்கொள்ளக் கூடிய உவமைக்கூடாக, அவர்களின் நயவஞ்சக நாய்க்குணத்தை அனைவரும் அறிய ''சோற்றெருடு பானையை நாய் கௌவிக் கொண்டோடில்சோறுண்ணலாகுமோடீ-சுதந்திரச் சோறுண்ணலாகுமோடீ'' என்று பாடுகின்றார்.

ஈழக்குறத்தியர் கவிதையில் ''தேவரெலாம் கொலுவிருக்கும் ஈழமெங்கள் தேயம்'' என்றும், ''மூவரன்று பாடு திருகோணமலை நாட்டில்'' என்று கூறி தமது தேசப்பற்றையும் சமயப்பற்றையும் ஒருசேரநிலைநிறுத்தியுள்ளார். சைவத்தின் உயர்வைப் பாடிய புலவர்'' புத்தபிரான் பொன்னடியாம் பொற்கமலபீடம் பொலியுமலை எங்கள் மலை ஈழம் எங்கள் தேயம்'' என்று பாடும் புலவன் ''மாவலிகங்கைப் புனலாம் தாவணியை வீசி மாதிரமெலாம் மணக்கும் வாசனையைப்பூசி காவலரின் கண்மருட்டும் கன்னி எங்கள் தேயம் காசினியில் இவளைப் போலும் கன்னி இல்லை, இல்லை'' என்று பாடியுள்ளான். இப்புலவனுக்கு மொழிப்பிரச்னை உறுதியாகத் தீர்ந்த முடிவாக அமைகிறது. இந்தியப் பிரச்னை பற்றிக் கூறும்போது ''இந்தியரெம் அக்கை மக்கள் என்று அணைக்கும் தேயம்'' என்றும் அது ''செந்தமிழும் சிங்களமும் ஆயவிருதோழி சேவை செய்யும் இராச கன்னி ஈழம்எங்கள் தேயம்'' என்றும் இறுமாந்து பாடுகின்றார். நாட்டின் கலைத்துறைச் சிகரமாய் விளங்கும் சிவனொளிபாதமலை பற்றிக் கூறும் போது பாரதியடியான் ''எம்மதமும் சம்மதமென்றேத்து ஸ்ரீ பாதம்'' என்று தன் கருத்தை குன்றின் மீதுவைத்துச்சென்றுள்ளார்.

இத்தகைய தேசபக்தியும், மொழிப்பற்றும் சமூகசமத்துவ உணர்வும் ஒருங்கே பொருந்திய பாரதியடியான் அவரைச் சரிவர அறிந்த அனைவரின் அன்பையும் பெறுவதில் அதிசயமில்லை. இவரைப் பெற்ற நயினையம்பதிபெரும் பேறு பெற்றது. பாரதியடியானின்முயற்சியால் 1930ம் ஆண்டுவரையில் பாரதியின் புகழ்பரப்பும் விழா ஒன்று அவ்வூரில் எடுக்கப்பட்டது. ஈழத்திலும் இந்தியாவிலும் காலத்தால் பாரதியின் புகழ் பரப்ப எடுக்கப்பட்ட முயற்சிகளில் பாரதியடியான் எடுத்த முயற்சி தொன்மை வாய்ந்தது. பாரதியடியானின் பாக்கள் சிலவே கிடைக்கப் பெற்றுள்ளன. ''பாரதீயம்'' என்று அவர் பாடியுள்ள கவிதையில் ''பாரதியே தெய்வப்பழமே என் பாக்கியமே'' என்று குருபக்தி ததும்பப் பாடிய கவிதை படிப்போருள்ளத்தைத் தொடும். பாரதிஅடியான் பிறந்தநாடு பெருமை பெற்றது.

தமிழ் வளர்த்த

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிவங்களால் பலதிறப்பட்டுச் செழித்து வளர்ந்துள்ளதென்பதும் நன்குவிளங்கும் என்று டாக்டர் கோல்ட்வெல் கூறியுள்ளார்...—''

''தமிழின் முற்பிறப்பும் தொன்மையும் தக்க காரணங்களால் நிறுவப்பட்டுள்ளன. கோல்ட்வெல் ஆசிரியர் கூறும் இக்கொள்கையை மறுப்பது எளிதன்று.'' என்று கோல்ட்வெல்ஐயரின் முடிபுகளையே ஏற்றும் நிற்கின்றார்.

நூற்றாண்டுப் பாராட்டு

கோல்ட்வெல் ஐயரின் ''திராவிடமொழிகள் ஒப்பிலக்கணம்'' 1856-ல் வெளியிடப்பட்டது. 1956-ல் திராவிடவியல் ஆராய்ச்சியாளர்கள் எங்கும் நூற்றாண்டு விழாவினைக்கொண்டாடினர். செக்கோஸ்லவாக்கியா நாட்டு அரசாங்கம் வெளியிடும் ''ஆக்கைவ் ஒறியன்ராலினி'' என்ற ஆராய்ச்சி ஏட்டின் 1956 இதழ் ஒன்றில் செக் நாட்டுத் தமிழறிஞர் கலாநிதி கமீல் சுவலபில் கோல்ட்வெல் ஐயரின் திராவிட மொழியியல் புரட்சியை வெகுவாகப் பாராட்டினர்.

தொடர் வளர்ச்சி

வையாபுரிப்பிள்ளை அவர்களுக்குப்பின் திராவிடவியல் ஆராய்ச்சி மேலும் வளர்ந்து விட்டது. பேராசிரியர்கள் பரோ, எமனோ போன்றோர் வேதகாலத்திலேயே வடமொழி தமிழ்மொழியிடம் சொற்களை இரவல் எடுத்திருக்கிறது என்று பல சான்றுகளுடன் நிறுவியுள்ளனர்.

முடிவு

கோல்ட்வெல் ஐயர் 1891-ம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் 28-ம் திகதி மறைந்தார். ஆனல் அவர் செய்து வைத்த திராவிடவியற் புரட்சி இன்னும் அத்துறையில் ஈடுபடுவோருக்குப் பெருவிருந்தாகிஅன்னருக்கு அமரத்துவம் அளித்துக் கொண்டிருக்கிறது. திராவிடவியல் ஆராய்ச்சி வளர வளர அவரது புகழும் வளர்ந்துகொண்டே இருக்கிறது.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரி சேட்டுகள்
● கால்மேசுகள்
(Nylon & Cotton)
லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.

சிறுகதை நாடகம்

(24—10—65இதழில்வெளியான சிறுகதை நாடகத்தின் தொடர்ச்சி)

சின்னத்துரை: ம்..,மறந்திட்டன் .. என்னத்தைச் சொல்லிக் கொண்டுவந்து விட்டனுன்?

கிழவி: உனக்குஎன்னவோ மயக்கம்போல சொல்றதையும்மறந்துபோகுது.. ஏதோ சிரிச்சுக்கொண்டு இருந்தினம் எண்டு சொன்னுய்...

சின்:ஓ..ஓ.பிறகுநான்அவுக்கடியெண்டு அவவைத்தான் கூப்பிட்டன்... அதுக்கு அவர் சீ, ஏன் கழுதைமாதிரிச் சத்தம்போட்டனி...? சிகறெட்டைத் தந்திட்டுப்போஎண்டு கோவிச்சுப்பேசி...

கிழ:என்ன இதுக்குத்தான் அவ பெத்துவிட்டுப்போனவவாக்கும்...? டேய், நீ அவனுக்குப் பல்லு முப்பத்திரண்டையும் கொட்டேல்லையே...

சின்: அவர்தான் கோவிச்சவர். ஆனுல் அக்கா அவரைத்தாறுக்கும் மாறுக்கும் பேசு பேசெண்டு பேசினவா உனக்கு அது தெரியுமே...?

கிழ: பேசின்வளோ ..எப்ப பேசினவள்.,?

சின்; உடனே தான்...

கிழ; என்னெண்டு...?

சின்: அது பாவம். இந்த நெருப்பாய் எரியிற வெய்யிலிலை ஓடிப்போய் வேண்டிக் கொண்டு வருகுது. அதை உணராமல் பேசிறீங்களே. அது ''போ'' எண்டால் போகுது, ''வா'' எண்டால் வருகுது. மூளையில்லையெண்டதுக்காக மனிசரைஇப்படி நாயாட்டமாகவோ பாவிக்கிறது...? அது ஒரு வஞ்சகமில்லாத நல்லபிறவியெண்டபடியால் தான் தன்பாட்டிலை போகுதுஎண்டு பேசினவ.

கிழ: அவனை அவள்பேசின பேச்சு இவ்வளவுந்தானே..? இதைச் சொல்றதுக்குத்தானுக்கும் நீரும் அவளைப்பற்றி புழுகி அடிக்கிறீர்...

சின்: கொஞ்சம் பேசாமல் கேள் பெத்தாச்சி. நான் சொல்ல முந்திச் சன்னதம் போட்டால்...

கிழ: சரி, சொல்லித்துலை. சிரழிஞ்ச கதையைக் கேப்பம்... கேக்காட்டியும் கோபம் வரும் உனக்கு...

சின்:ம்...அப்பிடிஅவ சொல்லியதும்... அவர் ... எப்பிடியெண்டாலும் சின்னத்துரை உன்ர ரத்தமல்லே. ஆள் சிவப்பெண்டாலும் நிழல் கறுப்பாகத்தானே தெரியும்...? அதுதான் உனக்குச் சின்னத்துரை எண்டவுடன் துடிக்குது— எண்டார். அதுக்கு அவ, அது உண்மைதான். அவர் எப்படியும் என்ர ரத்தம்தான். நீதியும் ரத்தமும் எல்லாருக்கும் ஓரேமாதிரித்தான் இருக்கவேணும்... எண்டு எனக்காகப் பேசினு...

கிழ: அ..என்ர ரத்தமெண்டு சொன்னவளோ!

சின்: ஓமெண்டுதானே சொல்லுறன்.

கிழ: நான் பெத்த என்ர ராசாத்தி: உன்ர வாக்குப் பலிச்சுதெண்டால், நானும் உன்னேடை வந்திடுவனடி நாச்சியார்.

சின்:என்ன பெத்தாச்சி? மேல பாத்துஆருக்குச்சொல்ருய்...?

கிழ: (புலம்பலுடன்) அவதான்... என்ர நான்பெத்தவ உன்னுடைய ஆச்சி...

சின்: அவ அங்கை எங்கை இருக்கிரு? செத்துப்போட்டாவல்லே?

கிழ: ஐயோ.என்ரஅப்பனே அப்படி உன்னுடைய வாயாலைசொல்லாதை. அவ சொன்ன வாக்கினுலைதான் நானும்இந்தக் கிழட்டுக் கொட்டைவைச்சு கொண்டு உனக்காகஉலாசாடுறன்.உனக்குத் தெரியாதெடி அப்பு.

சின்: (கவலையோடு)நீஎப்ப பாத்தாலும் அழுதவண்ணம் அதுதான் எலும்பாய் உருகிப்போருய பெத்தாச்சி... நீ அழுதால்இனிநானும்அழுவன்...

கிழ: நான் அழேல்லையடி.. நீ சொல்லு ராசா...

சின்: சொல்லட்டோ...? ம்.. பெத்தாச்சி, எப்படியெண்டாலும் மலரக்கா நல்லவ என்ன பெத்தாச்சி?

கிழ. ஓ..ஓ.. நல்லவதான். எங்களுடைய வங்கிஷத்திலயும் இல்லாத முறையாய் நடக்கிருள். நீ இனிமேல் அங்கு போகக்கூடாது.

சின்: ஏன்?

கிழ:அது உனக்குத்தேவையில்லை. போகப்படாதெண்டால்போகப்படாது. மதியாதார் வீட்டு முத்தம் மிதிக்கப்படாது..

சின்: அவ நல்லவதானே? அப்ப, ஏன் போகப்படாதெண்டு சொல்ருய்?

கிழ:அவநல்லவ ஆருக்கு! அது உனக்கில்லை. இனி வீட்டோடை பேசாமல் இரு. போ..போய் அந்த வெத்திலை பாக்கு இடிக்கிற உரலை எடுத்துக் கொண்டுவா..?

சின்: இந்தா.....

கிழ:ம்..காலம்கலிபுரண்டு போச்சுது.. நீ அங்கை போகக்கூடாது..

சின்: பெத்தாச்சி, நான் ஒரு வியளம் கேக்கிறன்.,. சொல்லுறியே..?

கிழ:என்ன வியளம்...,?

சின்: ம்...சடங்கு முடிக்க முந்தி பெம்பிளைகளோடை ஆண்பிள்ளை கதைக்கிறேல்லை எண்டு சொன்னுய். அப்ப, இவை கதைக்கினமே, இது பிழைதானே..?

கிழ: அவள் எக்கேடுகெட்டும் போகட்டும். எங்களுக்கென்ன..? ஆனுல் நீ இனி அங்கைபோகாதை.போனுல் நான் உன்னுடைய ஆச்சியைப்போல் செத்துப் போவன்.

சின்: என்ன 'விசர்'க்கதை பேசுகிருய்..? நீ செத்தால் எனக்கு ஆர் இருக்கினம்..? அப்ப நானும் சாவன்.... சரி, பெத்தாச்சிநான் ஒருநாளும் அங்கை போகமாட்டன்.

கிழ: எங்கை, பெத்தாச்சியாணை எண்டு என்னுடைய தலையில் அடிச்சுச் சத்திய வாக்கு குடுபாப்பம்..

சின்: அ... இந்தா... என்னுடைய பெத்தாச்சியாணை நான்இனிமேல்பட்டு அங்கை போகமாட்டேன். இப்ப சரியே?

கிழ: எடி என்ர ராசகிளி, இம்மட்டு நல்லபுள்ளையாயிருக்கிற உனக்கு (போய்க் கொண்டு) இந்த ஓரவாங்கியம் பிடிச்சகடவுள் என்ர அப்பனுக்குக்கொஞ்சமெண்டாலும் அறிவைத்தராமல் போட்டானேயடி..

எஸ். அகஸ்தியர்

(5)

கந்தசாமி: ஹலோ பாலசிங்கம்..என்ன இந்தப்பக்கம்.

பால: எட கந்தசாமியே.. எங்கை துலைக்கோ?

கந்: சும்மா தெரியாதே? இந்தப்பக்கம் இப்ப தென்றல் வீசுது. (சிரித்தபடியே) அதுதான்..

பால: அப்படியே..? அது சரி உன்னுடைய அந்த ''அது'' என்னமாதிரியிருக்குது..

கந்: என்ன, சோதினை மறுமொழியோ..

பால:சே போ குழந்தைப் பிள்ளை மாதிரி... அதுதான் உன்னுடைய அந்த ''லவ்''

கந்: ஓகோ நீ அந்தஇடத்திலை கைவைக்கிறியே?அது..

பால: சரிதான், எனக்கு சங்கதியெல்லாம் தெரியும். உன்னேடைதான் லீவிலை யாழ்ப்பாணம் போனப்போ யூனிவர் சிட்டியிலையிருந்து கோச்சியில் ஒருமிக்கவந்தனே.. என்னிடமே ஒழிக்கிருயே..ஓகோ.. தங்கமலர் பக்கத்திலை நிக்குதெண்டு யோசிக்கிறியோ?

தங்கமலர்: (கேலிச்சிரிப்புடன்) நான் போறன், தாராளமாய்க் கதையுங்கோ.,

பால: இல்லை, நீயும்தான் கேளன்கதையை..

தங்: எனக்கு அது விருப்பமில்லை. நம்பிக்கையுமில்லை..

பால: ஏன்?

தங்: (மெதுவாக)ஏனெண்டால் இந்தக்காலத்திலை காதல் கீதல் எண்டு சில பேர் கல்யாணிராகம் பாடிப் போட்டுபிறகுஏதும்நிலைமை மாறிவிட்டால்முகாரிபாடத் தொடங்கிவிடுவினம். எதையும் சிந்தித்து ஒரு நிலையை உருவாக்கமுடியாது. ஒரு நிலைதான் மனிதனுடைய சிந்தனையை உருவாக்கிச் செயல்படத் தூண்டுகிறது. அதனுல்தான் எந்தஒருகாரியமும் நடக்க முந்தி அது நடந்துவிட்டதாகக் கற்பனை பண்ணப்படாது எண்டு சொல்றன்.

பால: மலர் தத்துவவிளக்கத்துக்கும், குஷிக்கும் இடைப்பட்ட நேரம் இருக்குதே ... அது நெருப்பு மாதிரி... (சிரித்தபடி)ஆகையால் இத்துடன் இதை நிறுத்திவிட்டு வேறு கட்டத்துக்கு வருவோம்.

கந்: பாலு, இப்பதான் விஷயத்துக்கு வந்திருக்கிருன். நான் ஒருத்தன் நிக்கிறதையும் கவனியாமல் நீங்கள் என்னவோ உங்கடை பாட்டுக்குக் காச்சா பூச்சா எண்டால் ...?

தங்: (சிரித்தபடி) நான் காச்சாவும் போடேல்ல. பூச்சாவும் விடேல்ல. உங்கடை சிநேகிதன் தான்...

பால: மச்சான் கந்தசாமி...இப்பஅறிஞ்சுகொள் எங்களுடைய பொலிசியை..

சின்: (தூரத்திலிருந்து ... செருமும் சத்தம்)

பால: கந்தசாமி...அங்கை வாருரே...ஆசாமி... ஆளைக் கொஞ்சம்கவனிச்சுக்கொள். சின்னத்துரை ...

சின்: (வந்து கொண்டு) என்ன சங்கதி கூப்பிடுறீர்... சின்னத்துரையெண்டு என்னுடைய தலைமாட்டிலை நீர் எழுதிவைச்சிருக்கிறீராக்கும்...?

பால: கந்தசாமி எப்பிடி ஆளின்ர அழகு...

கந்: பாலசிங்கம் ...ஆள் ஆர் ..,ஆளின்ரை உருவத்துக்கு எங்கையாவது போயிலைத் தோட்டத்திலை கொண்டுபோய் இப்பிடி இருஎண்டு நம்பி இறக்கிவிடலாம் போல இருக்குது ..

பால: (கேலியாக) நீ இப்பிடிச் சொல்ருய். ஆனுல் சின்னத்துரைதான் எங்களுக்கு வழிகாட்டி. அது உனக்குத் தெரியுமா ...

சின்: உந்தக் கதையெல்லாம் எனக்கு நல்லா விளங்கும்...என்னை இனி ஏமாத்தி அனுப்ப ஏலாது... பெத்தாச்சி எல்லாம் எனக்குச் சொன்னவ ..

கந்: மச்சான் பாலசிங்கம், சின்னத்துரை அண்ணன் ஒரு அறிஞரோ...?

பால: அறிஞரா ...? அவர் ஆணையிட்டால் நாங்கள் சாணை பிடிப்பம்... (மெதுவாக) ஆனுல் ஒண்டு... அது என்னெண்டால் அண்ணன் பூனையை நினைச்சுக்கொண்டு தான் ஆனை எண்டு கத்துவார்...

தங்கமலர்: அ...சரிசரி... வெறும் பேச்சை விட்டிட்டு கூப்பிட்ட வாய்க்கு மதிச்சு வந்தவருக்கு என்னெண்டு சொல்லுங்கோ...

பால: என்ன மலர் .. உனக்கு வருத்தமாயிருக்குதா...?

தங்: பின்னை என்ன...? ஏன் ஒரு மனுசரை வீணுகப் பேய்க்காட்டிறீங்கள்.. இதுதான் யூனிவர்சிட்டியிலை படிக்கிற படிப்பாக்கும்...?

பால: இல்லை மலர். இண்டைக்கு ஆள் ஒரு மாதிரிக் கதைக்கிருர். அதுதான் எனக்கு விளங்கேல்லை.

சின்: ஓ...ஓ ... இனி எல்லாம் புது நாணயமாய்த் தான் நடக்கும்.

கந்: என்ன பாலசிங்கம் நீ சொன்னமாதிரி இல்லையே...சின்னத்துரை அண்ணற்ற பேச்சில ''ஹீற்'' ஏறுது. என்ன சங்கதி...?

பால: அதுதான் கந்தசாமி...எனக்கும் தெரியேல்லை. தெரியாதா இந்தக் காலத்திலை நடக்கிற சங்கதிகளை...

தங்: நல்ல விளக்கம்தான் இது...

பால: என்ன மலர் கிண்டலா செய்கிருய்...? சரி, அப்ப இந்தக் காலத்திலை நடக்கிற சங்கதிகள் எண்டால் என்னெண்டுசொல்லுபாப்பம்...?

தங்: இருந்த நிலையிலை ஏற்படும் மாற்றத்தைத் தான் சொல்றது. ஆனுல், நீங்கள் எண்ணுறதுபோல அடிபிடியல்ல. மாற்றம் ஏற்படுறபோது களேபரம் உண்டாகலாம். அது இல்லாமலும் இருக்கும். சில பேர் இதுக்கே அர்த்தம் தெரியாமல் இரத்தக் கொதிப்படைஞ்சு தாங்களே தங்களுக்கு இன்ஜெக்சன் செய்துகொள்ளுகினம்.

பால: (சமாளித்துச் சிரித்தபடி) கந்தசாமி பாத்தியே ...? மலர் சாதாரணக் குசினிப்பெண் மட்டுமல்ல, இலக்கியம் சுவைக்கும் வெறும் ரசிகையுமல்ல, அத்தனைக்கும் மேலே ஓர் அரசியல் வாதியும் கூட..

தங்: போதும் உங்களுடைய புகழ்மாலை. சரக்கில்லாதவைதான் புகழுக்கு மசிவினம். உந்தப் பேச்சு அவைதர வளிக்குத்தான் நல்லாய் இனிக்கும்.

கந்: அப்ப் இதுஉங்களுக்கு வேப்பங்காயோ...?

தங்: காயல்ல பச்சைப் பிஞ்சு

பால: சரி சரி . . மலர் .. இப்பிடியே பேசிக்கொண்டிருந்தால், அதிருக்க..எங்கை சின்னத்துரை ...

சின: ஏன், என்ன சங்கதி ...

பால: வாய் சப்பெண்டு போச்சுது.. சின்னத்துரை, இந்தா காசு. உதில கடைக்குப் போய் ஒரு ''பைக்கட் சிகரட்'' வாங்கிவா பாப்பம்...

சின்: ம் . . என்ன . . .?

பால: என்ன, என்னை உப்பிடிப் பூந்து பாக்கிருய் —? போவன், போய் வேண்டிக் கொண்டுவா —

சின்:கொண்டா காசை...

பால: அ .இந்தா.. (சிரித்துக் கொண்டு) கந்தசாமி சின்னத்துரை நல்லபிள்ளையெண்டு நேரத்தோடை சொன்னன் .. இப்ப பாத்தியா ..

சின்: நல்லபிள்ளையெண்டு எனக்கு வட்டர் பூசவேண்டாம். நான் ஒண்டும் மொக்கனில்லை. இந்தா பிடி உன்ர காசை. உனக்கு இனிமேல் சிகறேற்று வாங்க நான் போகமாட்டன்...

பால: அ...? என்ன ...? எடே...

தங்: மனமில்லையாக்கும். அதுக்கேன் இப்பிடி கறுமுறுப்பான் ..?

பால: மலர் ... என்னைப் பற்றிச் சரியாக உனக்குத் தெரியாது. என்ர வாழ்க்கையிலை இப்பிடி ஒரு நாளும் ஒரு தேட்கிறேட் பொடியன் பேசினது கிடையாது. அதோடை இவன் ஒரு மடையன்.

கந்: என்ன பாலசிங்கம் அறிஞர்உம்முடையகாதைச் செவ்வையாக் கடிச்சிட்டாரே ''

பால: இதெல்லாம் சில்லறை...

தங்: சில்லறை எண்டு சொல்லிக்கொண்டு தான் இந்தச் சின்னவிஷயத்தைக் காரமாய்த் தூக்கினீங்கள்.

பால: மலர் நீ சொன்னதுசரி இதுகாரம்தான் டேய் சின்னத்துரை என்னடா சொன்னனி ..

சின்: (கோபமாக) இவர் பெரிய படிப்பாளி. நீ பேசினுப்போல நான் பயந்திடுவன் எண்ட எண்ணமாக்கும். நான் என்னுடைய பெத்தாச்சி ஒரு ஆளுக்குத்தான் பயம். மற்ற எந்தக் கொம்பருக்கும் பயமில்லை. பெத்தாச்சி சொல்றதைத் தான் நான் செய்வன் ...

கந்: பாலசிங்கம் அதார் அண்ணன்ர பெத்தாச்சி...?

தங்: ஆகப்பகிடி பண்ண வேண்டியதில்லை. அவ எனக்கும் பெத்தாச்சிதான்.

கந்: மன்னிக்கவேணும். அப்படியெண்டால் ?

தங்: அவ பெத்த பிள்ளைகள்தான் எங்கட ஐயாவும் அவற்ர ஆச்சியும்.

கந்: அப்ப சின்னத்துரையண்ணன்ர தாய் உங்களுக்கு மாமி... என்ன....

தங்: அதுக்கு உமக்கென்ன...?

கந்: அப்படியோ சங்கதி? எனக்குஇப்பதானே விஷயம் புரிஞ்சுது...

சின்: உமக்கு என்ன விஷயம் புரிஞ்சுது...? புரிஞ்சால் சொல்லுமன்.

பால: கந்தசாமி அந்தக் கழுதையோடை நீ வாய் குடுக்காதை... (கோபமாக) டேய் சின்னத்துரை இதில நிண்டுகதையாதை. போடா கழுதை...

சின்: அ... நீ தான்ரா சடங்கு முடிக்க முந்தி பெம்புளைகளுக்குப் பின்னலை திரியிறனி... அண்டைக்கு ஒருநாள் ஆரோ ஒரு பெட்

(9 ம் பக்கம் பார்க்க)

உத்தரவாதத்துடன்

பழைய டயர்களைப் புதுப்பிப்பதற்கும்

திறமான றப்பர் பொருட்களை தொகையாக

பெறுவதற்கும்

மிகச்சிறந்த இடம்.

ஜெனரல் இண்டஸ்ரீஸ் லிமிட்.,

அத்தியடி, யாழ்ப்பாணம்

காட்சி அறை:

20, ஸ்ரான்லி வீதி போன்: 7024

உங்கள் தேவை ! எங்கள் சேவை !!

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வார சிறுகதை, கவிதைப் போட்டி

பாராட்டுக் கதை I

சேரிப் பெண்

— முனியப்பதாசன் —

சக்தியின் கனிந்த கனிவு. தகதகவென்று பிரகாசிக்கிற நீற்றின் வெம்மை சுருண்டு அடங்கி உள் வெப்பமாய்க் கனிந்து நிற்கிற நீற்றின் கனிவு. காதளவோடிய கண்களின் கரையில் அந்த முற்றிப் பழுத்த நீற்றின் கனிவின் வெம்மை நிலவு பீறிடுகிறாற் போலத் துளும்பிக் கசிந்து கொண்டிருக்கிறது. கண் இமைகள் தென்றலின் இங்கிதத்தில் மெல்லென அசையும் மலர் இதழ்களின் தேக்கம். முகமெங்கணும் சக்தியின் பொலிவு. அந்தப் பொலிவின் உள்ளே பொங்கிப் பொசியும் சக்தியின் நளினம். ஊழித் தீ உள்ளடங்கி நெக்கு நெக்காய் உருகி நெகிழ்ந்து நீராய் உருகிச் சாரலாய் வீசிநிற்கிறாற் போலக் குளுமையின் அழகு.

அவள் சக்தி
சக்தியே அவள்.
அவள்தான் சக்தி.

சரவணை ஊர்க் கிராமப்புறத்து மண்ணில், ஒதுக்கப்பட்ட வகுப்பினர் எனப்பட்டோர் வாழும் பறையர் சேரியில் அந்தச் சக்தியும் உள் அடங்கித்தான் நிற்கிறது. உயிரின் இயக்கசக்தியால் ஆண்டும் ஆளப்பட்டும் அனுபவித்தும் அனுபவிக்கப்பட்டும் வென்றும் தோற்றும் நின்ற இரண்டு உயிர்கள் சுருதிபேதம் பிசகாமல் கலந்தகலப்பில் உயிர் ஊற்றாய் ஓடிய அந்தப் புலைச்சியின் கருவறையில் நின்று பூத்த புத்தம் புதிய உயிர்ப்பூ அவள். புதிதாய் மனிதன் வகுத்த அந்த எல்லைக் கோட்டுள் முதல் குரல் எழுப்பிய போது அந்தக் குரல் சக்தியின் குரலாய் ஒலித்தது. ஒலியின் உள் அறைகளில் மோதிமோதிச் சிதறிப் பீறிட்டு வெளியே பிதுங்க முனைந்த முனைப்பில் தோற்றுப்போய் அவளுள் சமைந்தது. அப்போது அவள் குழந்தை. உயிர்ப்பூ. அதிகாலைப் பொழுதில் பரிசுத்தமாய் முகை அவிழ்ந்து மணம் பரப்பிநிற்கிறபூ.

ஆண்டுகள் பொறிகளாய் மின்னி உதிர்ந்து கருகிக்கொண்டிருந்தன. அவள் தோற்றக்காலத்தில் நின்ற நிறைவோடு புத்தம் புதிய உயிர்ப்பூவின் இரகசியம் நிரம்பிய பெண்ணாகத்தான் இப்போதும் நிற்கிறாள். மாலை மயங்கி வருகிறபோது எதனாலோ மலர்க்குவையில் படிந்து நிற்கிற ஒரு தேய்வின் கீற்றுக்கள் அவள் புறத்தே மின்னுகின்றன.

நாரந்தனைக் கந்தசுவாமி கோவிலின் இனிய நாதம் காற்றின் உள்புகுந்து அதுவேயாய் மாறி மாறிச் சுழன்று சுழன்றுபரவுகிறது. கோவில் மணியின் நாக்கிலிருந்தும் தாளலயத்தோடு சுண்டப்பட்ட நாத அலைகள் பிறக்கிறபோது அருகேநின்ற அரசமரத்தின் இலைகள் இங்கிதமாய் அசைகின்றன. அந்த துயில் நீப்பில் காகம் ஒன்று குரல் எழுப்ப அதுவே பலவாய் எழுந்தது. காலைப்போதில் உயிர்களின் உணர்வுகளில் படிந்துநிற்கும் மௌனசுகமே அந்தக் காக்கைகளின் குரலில்தேங்கிநிற்கிறாற்போல ஒரு சுகம். அது உயிர்கள் நடனமிடும் நேரம்.

பறைச்சேரியின் குடிலில் துயிலிற்கும் விழிப்பிற்குமிடையே ஊசலாடிய அந்தப் பெண்ணின் செவிப்புலனில், வல்ல கலைஞர்களின் கற்பனையில் ஒத்து உருவாகிய தேனிசையாய்ச் செழித்தது மணியோசை. சுண்டப்பட்ட உயிர் போல அவள் படுக்கையை விட்டு எழுந்தாள். சங்கீதமயமான அந்த மணியின் நாத அலைகளில் மிதந்து வருகிறாற் போலக் கோயிலண்டை வந்துகொண்டிருந்தாள்.

இடையீடற்றுப் பெய்து கொண்டிருந்த நாதஅலைகள் அவளுள் புகுந்து அவளாய் மாறிச் செழித்தது. கண்கள் வெறித்தபடி எதனையோ நோக்கின. புலர்ந்தும் புலராப் போதில் மங்கிய கருக்கிருட்டில் எதனையோ அவள் நெடு நேரமாய்த் துழாவினாள். லயப்பட்ட புலன்களின் ஒன்றலில் பிறக்கிற பார்வை. எதனையோ தன்னுள் பிரித்து அதனையே கொண்டு அந்தப்பெருவெளியில் அவள் தேடிக்கொண்டிருந்தாள்.

கண்கள் சோர்ந்து நின்றன.

பொழுது புலர்ந்து விட்டது.

அவள் வீடு நோக்கிநடந்தாள்.

பத்துவருடங்களுக்கு மேலதாய் அதுவே அவளுக்கு வழக்கமாகிவிட்டது. புலர்ந்தும் புலராப் போதில் கிளர்த்துவரும் அந்தக் கோவிலின் நாத அலைகள் அவள் செவியில்பட்டுவிடும். காலம் காலமாய் அந்தமணி ஓசை சொல்லும் சங்கதிகளை அவள் உயிர்க்கூட்டில் தேக்கி வைத்துக்கொண்டே வருகிறாற்போலவும் அவளுக்குப் படுவதுண்டு. அந்த இழுப்பில் அவள் கோவிலண்டை வந்து விடுவாள். வெகுநேரமாய் அந்த வெறித்த பார்வையோடு எதனையோ தேடுவாள். சோர்ந்துபோய் வீடுநோக்கி நடப்பாள்.

நெல்வயல்களின் வரம்புகளின் மேல் அவள் நடந்து கொண்டிருக்கிறாள். ஆவணி மாதத்தில்வானம் பொசிந்த போது வரம்பினிடையே தேங்கித்துடித்துநின்ற உயிர்கள் செழுமையாய்ப் படர்ந்திருந்தன. நடப்பதற்குச் சற்றே இலகுவாகக்கூட இருந்தது.

ஒழுங்கையில் ஏறிவிட்டாள். ஒழுங்கையின் முடக்கில் நின்றபடியே ஒருதரம் திரும்பிப் பார்த்தாள். கோவில்தெரியவில்லை. நெடிதோங்கிய அரசமரத்தின் அழகிய தோற்றம் பசுமை நிறைந்ததாய்த் தெரிந்தது.

வாரச் செய்கைக்காய் அவள் தகப்பன் அப்போது தான் மண்வெட்டியும் கையுமாய் ஒழுங்கை முடக்கில் மிதந்து கொண்டிருந்தான். அந்த மண்ணில் எவர் எவரையோ உய்விப்பதற்காய் அவன் சிந்திய உழைப்பின் வடுக்கள் அங்கமெல்லாம் மின்னுகின்றன. கன்னம்கரிய அந்த உருவத்தின் முகத்தில் அந்தமக்களுக்கே உரித்தான தொலைநோக்கு. அந்தப் பார்வையில் எதையும் அவர்கள் தமக்காய்ப் பார்ப்பதில்லை. வெறித்தபார்வை.

அந்த வெறுமைதட்டுகிற பார்வையைச் சுமந்தபடியே அவன் தன் மகளையும் அப்போது பார்த்தான். அந்தப் பார்வையில் ஒரு கனிவும் வெறுமையும் நிரம்பியிருந்தது. அவளோ திரும்பியும் பார்க்கவில்லை. வேகமாய் நடந்துகொண்டிருந்தாள்.

எதுவோ நினைவின் முனைகள் அவன் நெஞ்சில் அமுக்கிய அமுக்கில் அவன் குரல் ஒலித்தது.

''சின்னுச்சி''

அவள் சடுதியாகத்திரும்பினாள்.

''ஓலைவேண்டியந்துபோட்டிருக்கு. 'ரெண்டு சுளகு முடைஞ்சுவை. நாளைக்குப் பட்டணம் போகவேணும்.''

அவன் எதுவோ நினைவாய் மேலேநடந்தான்.

அவளும் எதுவோ நினைவாய் நடந்தாள்.

ஓலையை வார்த்து ஈர்க்கு எடுத்துச் சுளகு முடைந்து கொண்டிருந்தாள். அவள் உள் உயிர் எதற்கோ அழுதது. அவள் அகத்தில் நினைவுகள் சீந்தின.

இத்தனைக்கும் அவள் தாய்மை கனிய நின்றிருக்கவேண்டும். பறைச்சேரிமக்களுள் பல உயிர்ப் பூக்களை உதிர்த்திருக்கவேண்டும். அந்த நினைவு அவளுக்கு இனிக்கத்தான் இல்லை.

அவளுடைய சாதிக்காரர்களில் யாருமே அவளை அணுக என்றைக்கும் துணிந்ததில்லை அந்த நினைப்பின் முனைப்பிலேயே தாம் கருகிவிடுவோமோ என்கிற நினைவே அவர்களை அகழ்ந்து எடுத்தது. வாரச்செய்கைக்குப் புகையிலைக் கன்றுச் செய்கைக்கு கூலிக்கு நிலம்தீண்டும் அந்தக் குடியானவர்களின் சமூகத்தில் நிற்கிறசக்தியின் பொலிவு மிக்கஇளைஞர்கள் கூட அவளிடமிருந்து ஒதுங்கியேவிட்டார்கள். பாரம்பரிய தமிழ்த்தாயின் கருவறையில் உதித்த வளமைமிக்க சக்திகள் அந்தத் தமிழ்த்தாயின் கலப்பற்ற தமிழையே தம் பெயர்களாகச்சூட்டி நிறைவழியாக் கற்போடு நிற்கிற ஆண்மக்கள் ஒதுங்கிவிட்டபோது ...... சமூகத்தில் தம்மை உயர்வாய் எண்ணி நிற்கிற சக்தியற்ற மேல் வர்க்க இளைஞர்கள் அவளை எட்டி நின்று பார்த்தார்கள். சக்தியைத் தாம் சமூகத்தில் உயருகிறபோது இழந்துவிட்டு நின்ற ஆண்மக்களின் வெம்மையில்பிறந்த ஆண்மையோ அது? தொட்டு, சகலத்தையுமே அந்தச் சின்னுச்சி என்கிற சக்திக் கனலில் கலந்து சகலத்திற்குமே அரசனாய்நிற்கலாம் என்கிற வீரம் அவர்களிடம் முகிழ்க்கவில்லை. அவள் சேரிப்பெண் என்கிற நினைப்பு. அந்த நினைப்பில் பிறந்த சமூக அச்சம்.

அவளோ இந்த நினைப்பற்று நின்றுவிட்டாள். இப்பொழுது மட்டும் அவள் நெஞ்சில் அந்த நினைவுகள் ஊருகின்றனவோ?

அவளுக்கு வேதனையாக இருந்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

பாராட்டுக் கவிதை

உள்ளம் உயரவில்லை கள்ளம் மறையவில்லை

-- ஜீவா-நாவுக்கரசன் --

காலம் தான் மாறுதோ கவலையினித் தீராதோ!
கன்னியர் கொட்டுகின்ற கண்ணீர் தணியாதோ?
பேதங்கள் பேசுகின்ற பேதமைகள் ஓயாதோ?
பெண்மணிகள் வாழ்வினிலே பேரின்பம்
தோன்றுதோ?
கண்ணிருந்தும் குருடாகி கற்றிருந்தும்
அறிவிலியாய்
ஆலயம் தெய்வமென்று அறிவைக் குருடாக்கி
பண்பற்ற எண்ணத்தில் பற்றிப் படந்திருக்கும்
மக்களின் மனநிலைமை மாறுவதும் எக்காலம்?

பேதத்தை உண்டாக்கிப் பிறரைப் பிரித்துவைத்து
மேற்குலம் தாழ்குலமாய் மேதினியில் ஆக்கிவைத்த
தீண்டாதார் என்றஒரு தீவினையைச் செய்துவைத்த
வஞ்சகர்கள் வாழுகின்ற வையகத்தில்
தானுதித்தார்
நெஞ்சம் துதிக்கின்ற யேசு பெருமானும்
கர்த்தரும் முகம்மதும் புத்தர் மொழிந்ததும்
கருணைப் பெருவள்ளல் காந்தி அருளியதும்
கதையாகப் போனதிந்த காசினியில் வாழ்பவர்க்கு!

பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடியதும்
பாரதிதாசன் என்ற பாவலன் சொல்லியதும்
வாழ்க்கையறம் வகுத்த வள்ளுவனார் நீதிகளும்
சாதிமதிக் கொடுமை சாய்ந்திட வேண்டுமென்றும்
பேதமிலா உறவு பெருகிட வேண்டுமென்றும்
நீதிநிறைந்த இன்பம் நிலைத்திட வேண்டுமென்றும்
ஓதியுரைத்த தெல்லாம் ஒப்பாரி யாகியதோ?

யாழ்ப்பாண மக்களென்றால் யாரும் புதித்திடுவர்
வாழ்வின் பலதுறையில் நீளும் புகழுடையார்
கல்விக் கலைத்துறையும் காதல் புரியறமும்
பல்கிப் பலதேசம் பணத்தின் வணிகருமாய்
நல்கிநல் வாழ்வுதனை நயமாகப் பெற்றவர்கள்
இவர்கள் இதயத்தில் இருக்கும் நினைவெல்லாம்
பழமைப் பொருளுடைய மடமைச் செயல்வகைகள்.
வழமை பிழையென்றால் கடமை எதுவென்று
இளமை வயதுமுதல் இடித்து உரைக்கின்ற
அறிவு மதிபடைத்த ஆசானே ஈங்கில்லை.

அன்று நடந்ததுபோல் இன்றும் நடக்கின்ற
அறிவு இருக்கிறது. ஆனால் அதிலென்ன
பிழைகள் இருக்கிறது. பிறர்கள் நகைக்கிறதை
உணரும் அறிவில்லை உலகம் வளர்கின்ற
வேகம் தெரியாமல் விதமும் புரியாமல்
காலத்தின் கோலத்தில் கலந்திடவும் தெரியாமல்
புராணத்துக் கதைகளையும் புறப்பரட்டின்
மகிமையையும்
பேசும் திறனுண்டு; வாழ்வில் கடைப்பிடிக்க
கூசும் மனத்துடனே கூனும் முதுகுடனே
தம்மையறியாது பிறரைத் திருத்துகின்ற
பெருமை யுடையவர்கள் நிறைய இருப்பதினால்
உள்ளம் உயரவில்லை கள்ளம் மறையவில்லை.
மதத்தின் பெயராலே பிரித்து வாழுகின்ற
விதங்கள் பெருகியது வேற்றுமை கள்தீரவில்லை.

ஆதிமுதல் உலகில் சாதிமதங் களில்லை
பாதிமுதல் வழியில் பேதமதி படைத்தோர்
நாதியுறு பேதையரை நயத்தால் பிரித்துவைத்து
நீதிநிலைப்பொருளை நெஞ்சத்தில் விட்டொழித்து
ஆளும் மனிதர்களாய் அனுபவிக்கும் செல்வர்களாய்
சூழும் விதியென்று சொல்லிப் பலகதைகள்
சுரண்ட நினைத்தார்கள் சோம்பல்
வெறிபிடித்தோர்
அந்த நினைவாலே ஆண்டவனின் பிள்ளைகளை
செய்யும் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்த்துமிக
உய்யும் வழியறியா ஒவ்வோர் பெயர்கொடுத்து
சாதி அகராதி ஒன்றைச் சரிசெய்தார்.

பேசமுடியாத பெருமான் பெயரைவைத்து
ஆலயங்கள் கட்டியதில் அவனுருவைச்,
சிலையிருத்தி
அவனுடைய பிள்ளைகளை அதன்வெளியே நிறுத்தி
வைத்து
அவருழைப்பால் அவனுக்கு அபிஷேகம் என்றுபல
சடங்குகளைச் செய்கின்றார். சாத்திரங்கள்
பேசுகின்றார்.
சங்கடங்கள் இல்லாமல் மங்கலமாய்த் தாம்வாழ
இத்தனையும் உண்மை. இதனை அறிந்திருந்தும்
திருந்த மறுக்கின்றோம் தீமைகளைச் செய்கின்றோம்.
மதத்தின் பெயராலே மானிடரை வதைக்கின்றோம்.

ஆகவே! மானிடரே! அறிவு பெறவேண்டும்!
ஆண்டவனார் பெற்றெடுத்த அன்புக்குழந்தை
கள் நாம்
ஆசைமிகு உள்ளத்தில் அகந்தை மமதையற்று
அழைப்பு வரும்போது அப்படியே போகும்முன்
கலப்பு மணத்தாலே பெலப்பு பெறவேண்டும்!
மக்கள் மனமறிந்து மன்னுயிரை நேசித்து,
ஒன்றே குலமாக ஒருவனே தேவனாய்
நன்றே செயல்புரிந்து நாயகம் நபிபோலே
சீதனத்தைப் பாராமல் .சீர்வரிசை கேளாமல்
பெண்குலத்தைப் பேணி பெருவாழ்வு நாம்காட்டி.
பணத்திற்கு மேலாக குணத்தை வரவழைத்து
குன்றக்குடி யாபோல் கோபுரத்து மாமணிபோல்
என்றென்றும் வாழநாம் நன்றே பழகிடுவோம்
எல்லோரும் வாழநாம் இறைவனை வேண்டிடுவோம்.

கலை அரங்கம்

'அருமை'யான குணசித்திர நடிகர்

நடிகர் எஸ். அருமை நாயகத்தின் அறைக்குள் ஒருநாள் நுழைந்தபோது ஒரு பாம்பு என்னை வரவேற்றது. பத்தடி நீளமுள்ள ஒரு செட்டிநாகம். 'அது கடிக்காது, உட்காருங்கள்' என்று சொன்னார் 'அருமை', தான் வரைந்து கொண்டிருந்த 'சீன்' ஒன்றை அரை குறையில் விட்டுவிட்டு

'இந்தப் பாம்பு—' என்று இழுத்தேன், ஜாக்கிரதையாக.

'அத நான்தான் சுட்டு வைத்திருக்கிறேன், நாடகங்களில் உபயோகிக்கலாமென்று. அழகாயிருக்கிறது, என்ன?' என்று பாம்பின் முதுகைத் தடவிக்கொடுத்தார் அருமை.

வயல்வெளிக்கு வேலைமினைக்கெட்டுப் போய் பாம்பு ஒன்றை சுட்டுக்கொண்டுவந்து, அதை நைஸாகப்பிளந்து, உள்ளே பஞ்சைத் திணித்து தைத்து வைத்திருக்கும் அளவிற்கு நாடகப் பைத்தியம் தலைக்கு ஏறியிருக்கிறது இந்த இளம் கலைஞனுக்கு.

நாடக 'சீன்'கள், டோப்பாக்கள், உடுப்புகள் மேக்கப் மை, காகிதப் பொன், மணிகள், ஊசிகள், இசைக் கருவிகள் - இன்னும் என்னென்னவோ லொட்டு லொசுக்குகளெல்லாம் அந்த அறை நிறையக் கிடந்தன

அருமை நாயகம் ஒரு சிறந்த குணசித்திர நடிகர் மட்டுமல்ல. அவர் நாடகங்கள் எழுதுவார், சீன்கள் வரைவார், உடுப்புகள் தயாரிப்பார், மேக்கப்செய்வார், புகைப்படக் கலைஞர். போதாக்குறைக்கு இப்பொழுது வயலின் வாசிக்க

(10ம் பக்கம் பார்க்க)

சிறுகதை நாடகம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டையோட கதைச்சியே. சீக்—வெக்கம் கெட்டனி—

பால: (தவிப்போடு) மலர். பார் இவன் சொல்ற பொய்யை...? ஆரோ—பெட்டையோட என்னைக் கண்டதாகக் கதை கட்டியிருக்கினுனே... மொக்கன் எண்டு நாங்கள் கணிச்சதுதான் பிழை.

சின்: நான் ஏன் பொய் சொல்றன்...? நீ படிச்சனி... நல்லா அதை வைச்சுக்கொண்டு ஏமாத்துவாய். நீதான்நேரத்துக்கு ஒருதரம் வாய்கூசாமல் பொய் சொல்லுவாய். என்னை என்னுடைய பெத்தாச்சி அப்பிடி வளக்கேல்லை தெரியுமே...?

பால: கந்தசாமி... பார்... எங்களோடை சரிக்கட்டிக் கதைக்க இடம்குடுத்தால் இப்படித்தான் வரு—ம்—(கோபமாக) சின்னத்துரை இதில நிற்காமல் எங்கையன் போ—

சின்: நீ தான் பிறத்தியான். என்னுடைய ஆச்சியும் தங்கமலர் அக்காவின்ர இல்ல... அவ என்னிலும் வயது குறைய—ம்— தங்கமலரின்ர ஐயாவையும் எங்கட பெத்தாச்சிதான் பெத்தவ...

பால: (கோபமாக) சின்னத்துரை வாய்க்கு வாய் குடுத்து முகரக்கட்டை உடைபடாமல் எங்கையன் ஓடிப்போ...

சின்: (குழறிக்கொண்டே) ஐயோ என்ர பெத்தாச்சி... பாலசிங்கம்...

தங்: இதென்ன கண்டறியாத வேலை... (சிணுங்கியபடி) ஐயோ... சின்னத்துரையின்ரை தலைகொட்டப் பாக்குமாதிரி வீங்கிப்போச்சுதே... கடவுளே நான் என்ன செய்ய

கிழ: (வந்துகொண்டு) அங்காலை இஞ்சாலை பேகாதையெண்டு இவனுக்குச் சொன்னேனே... இப்பநான் என்ன செய்ய...? சின்னத்துரை... என்ன என்ர அப்பனுக்கு என்ன செய்தவங்கள் ?

சின்: (விக்கி அழுதுகொண்டே) இதில நிக்கிறனை இவன் பாலசிங்கம் தான்—

கிழ: (ஆவேசத்துடன்) தங்கமலர், எல்லாம் உன்னாலை தான் வந்தது...

சின்: அவ இல்லை... அவ எனக்காகத்தான் பேசினவ. நீ அவவைப்பேசாதை.

கிழ: நீ சும்மா இரு. உனக்கு ஒண்டும் தெரியாது. தங்கமலர் நீ நல்லா யோசிச்சுப்பாத்தியே...

தங்: நான் என்னத்தை யோசிக்கிறது—?

கிழ: என்னத்தை யோசிக்கிறதோ...? ம்— அதுபாவம். பிறந்த வீட்டுக்குள் தகப்பனையும் தாயையும் திண்டிட்டுத் தேடுவாரத்து அலையுது—

சின்: பெத்தாச்சி...

கிழ: என்ர ராசா நீ அழாதையடா...

சின்: என்னைவிடனை... நான் இனி அழேல்ல—

கிழ: தங்கமலர்... உன்ர அப்படும்... சின்னத்துரையின்ர தாயும் என்னுடைய பிள்ளைகள். உன் கொப்பன் உன்னுடைய அப்பரும்... செத்தமாமியோடை சேர்ந்து— உனக்கும் சின்னத்துரைக்கும் போட்ட சாணக்கூறையையும் கை கழுவிக்குடுத்த வாக்கையும் தவறிப்போட்டான் உன்னுடைய அப்பர். காரியமில்லை. இது வலது குறைஞ்சதெண்ட இளக்காரத்திலை இப்ப கைவிட்டிட்டீங்கள். அதுவும்போகட்டும். ஆனால் நீ சின்னத்துரையனுடைய ரத்தமெண்டு எப்பவெண்டாலும் மதிச்சியே.

சின்: அவ அப்பிடி ஒண்டும் பிழையாய்ச் செய்யேல்லை. அவ மதிச்சவ ஆனல்

கிழ: நீர் சும்மா இரும். தங்கமலர்... நீயும் என்ர (அழுகையுடன்) நான் பெத்ததின்ர பிள்ளை உனக்கு முன்னாலை தான் இந்தக் கூத்தை இவன் நடத்தியிருக்கிறான்.

சின்: இல்லைப் பெத்தாச்சி. ஆனால்...

கிழ: சின்னத்துரை நீ சும்மா இரு... அவர் வந்திட்டார் புதிசா அவவுக்காகப் பேச- அவவாம் அவ. அவ தன்ர ரத்தமெண்டு உன்னை எப்பவாவது மதிக்கேல்லை... இதெல்லாத்தையும்ஒருநாள் கடவுள்தான் கேப்பார். ம்... இப்ப எல்லாம் கோட்டுச் சூட்டுக்காறங்கள்... என்ன செய்றது...

பால: கிழவி, நானும் இவ்வளவு நேரமாப் பாக்கிறன். உன்னுடையவாய்ஓயுதில்லை. என்ன... உனக்குத்தான் வாயிருக்குதோ

கிழ: நான் உன்னோடை பேசேல்லை... நீ சும்மா இரு. தங்கமலர், நான் பேசப் பேச நீ ஒண்டும் வாய் துறந்து பேசிறுயில்லை. இவனுர், ஆரைப்பாத்துக்கதைக்கிறுன்... வப்பி...

பால: இதில நிண்டு சத்தம் போடாமல்போ—

சின்: இஞ்சாலவா பெத்தாச்சி.. டேய் என்னுடைய பெத்தாச்சியைப் பார்த்து என்ன சொன்னனி—?

கிழ: நீ அந்த வக்கில்லாதவனோடை வாய் குடுக்காதை ராசா... நீ இஞ்சால வா.

பால: (கனல் பறக்க) கிழவி உனக்குக் கடைசியாய்ச் சொல்றன்;. பத்திரமாய் வாயைப்பொத்திக்கொண்டு மூச்சுக்காட்டாமப் போ—

தங்: மிஸ்டர் பாலசிங்கம். வாயை மூடும்... நீர் கொஞ்சம் மனிதத்தன்மையோடை கதைக்கப்பழகும்.. அதுதெரியாவிட்டால் இந்தஇடத்தை விட்டு நீர்போகலாம்...

பால: என்ன...

தங்: (கோபமாக) இந்த இடத்தை விட்டுப்போகலாமெண்டு சொல்லுறன்.

பால: தங்கமலர்...

தங்: என்னுடைய பெயரையே உச்சரிக்கவேண்டாம்... தயவுசெய்து நீர் போம்—

பால: நீ——

தங்: ஓம்...நான்தான். இனி நீயும் இல்லை, நானும்இல்லை.

பால: மலர், நீ என்ர மானத்தை வாங்கிப்போட்டாய் —... நானும் உன்னுடைய மானத்தை வாங்கிச் சந்தி சிரிக்க வைக்காவிட்டால் தானும் பாலசிங்கமில்லை.

தங்: நாங்கள் எல்லாம் அப்பிடி ஒண்டும் மானங்கெட்டு நடக்கேல்லை. உந்தப் புலுடா விடுற காலம் மாறிப்போச்சுது, தெரியுமே?

(போய்க்கொண்டு)

பால: அ—நீ சீவிக்கிற கெட்டித்தனத்தைஒருக்கால் பார்க்கிறன், இருந்துபார் ..

தங்: (கோபமாகக் கேலியுடன்) சந்திரனைப்பார்த்து நாய் குலைச்சால் சந்திரனுக்குக்கேடில்லை,...போம்... போம்...

கிழ: என்ர ராசாத்தி! என்ர செல்லக்கிளியைத் தெரியாமல் பேசிப்போட்டனே ... (அழுதுகொண்டு) இஞ்ச வா என்ர ராசாத்தி...

தங்: (மெதுவாக) பெத்தாச்சி நீ அழாதை. நானும் அறியாத்தனமாகத் தான் உங்களை வெறுத்து நடந்திட்டன்... கவலைப்படாதை எல்லாத்துக்கும் இனி நான் இருக்கிறன்.........

கிழ: என்ர தங்கம்...... பேருக்கேத்த குணம் இருக்கெண்டு இப்பதான் ராஅறிஞ்சன்... என்ர தங்கமலர் என்ர வயிறு இப்பதான் குளுந்துது. (அழுதுகொண்டு) இனி நான் சின்னத்துரையை உன்ரை கையிலை ஒப்படைச்சுப்போட்டு நிம்மதியாச் சாவன்......

சின்: (வந்துகொண்டு) அ... அ பெத்தாச்சிக்கு இப்பதான் முகத்திலை சந்தோஷம் வந்தது.. (சிரித்துக்கொண்டு) அதிருக்க... பெத்தாச்சி... தங்கமலர் நல்லவளெண்டு நான் அப்பவே சொன்னேன். நீ என்னை விசரனாக்கிப்போட்டாய்.. ... துப்பரவாய் நம்பேல்லை... இப்ப பாத்தியே, ஆர் சொன்னது சரி...

கிழ: (சிரித்தபடி) ஓ... இப்ப எல்லாற்றை வாக்கும் சரியாப்போச்சுது... என்ன பிள்ளை தங்கமலர், நீவாயைத் துறந்து ஒரு வாக்குச்சொல்லன்...?

தங்: ஓம்...

சின்: (கையைத்தட்டிக் கொண்டே) அ— ஓமெண்டு சொல்லிப்போட்டா...... ஓமாம்... ஓமாம்... க்கா... க்கா... பிப்பீ... பிப்பீ... டும்... டும்...

(முற்றும்)

சிறுகதை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தமக்காய் ஒதுக்கிவிட்ட இந்த எல்லைக் கோட்டுள் வாழும் சேரிமக்கள் எவர்தான் சுகமாய் வாழுகிறார்கள்? தன் தாய்மையில் கனிந்து பிறந்தாலும் புதிதாய் மலருகிற அந்த உயிர்களும் இந்த வரம்புள் அடைபட்டும், காலமெல்லாம் யாருக்கோ உழைத்து உழைத்து ஓடாய்மாறிவிடுகிற நிலைமைதான் பிறந்திருக்கும். முற்றும் முழுதான வேகத்தோடு தம்மைக்கூலிய உழைப்பின்முனையில்நிறுத்தி சகலதையுமே கறந்துவிட்டு உதைத்துவிடுகிற இந்தமேல் வர்க்கச் சமூகம் ....

அந்த நினைவுகளே அவளுக்குக் கசந்தது.

பொழுது அசைந்தது—கோவிலின் நாதமணி அவள் செவிப்புலனில் படுகிறது.

நாத இழுப்பில் நாதமாகி இழுபட்டு நடந்துகொண்டிருந்தாள் சின்னாச்சி.

ஐப்பசி மாதத்து மேகம் கருமை கூட்டிக்கொண்டிருந்தது. வெறிச்சோடிய நிலப்பரப்பு எதனையோ சந்திக்க முனையும் முனைப்பில் செல்லமாய்க் கீதமிசைக்கிறது

அவள் சுந்தரமான கண்கள்நிலைகுத்தி வெகுநேரமாய் நின்றன. ஒளியும் காற்

(4-ம் பக்கம் பார்க்க)

REGAL—JAFFNA
NOW SHOWING!
TONY RUSSEL, HELGALINE
in
The Secret 7
(M G M's Scope-Eastman Colour)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவ (கொம்பனித்தெரு)
விஜயா மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு
தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
"நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்"
எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த

விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென் கலர்)

கிறீஸ்து ராஜா திருநாள்

மன்னார், சனி

கடந்த ஞாயிற்றுக்கிழமை முருங்கன் கிறீஸ்து ராஜா தேவாலயத்தில் கிறீஸ்து ராஜா திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அங்கு நடைபெற்ற வைபவங்களில் வண. பிதா மைக்கேல், வண. பிதா குணசீலன் முதலியவர்கள் கலந்துகொண்டனர். மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்திலும் கிறீஸ்து ராஜாவின் மகிமையைப் பற்றி பிரசங்கம் பூசையில் சொல்லப்பட்டது.

சிறுகதை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் நிலவும் இருளும் உயிரும் எங்கிருந்தோ அவள் கண்களில் தேங்கி நின்று நின்று மின்னின. ஒளிகட்டி நின்றது.

அவள் கடைக் கண்ணில் ஒளி அமுத தாரையாய் வழிந்தது.

எப்பொழுதோ, எங்கோ எதனுலோ அறுபட்டுப்போன நாதத்தின் அலைகள் சிறுகச்சிறுகச் சேர்ந்து மீண்டும்தன்னிடமே நிரம்பி வழிகிறுற்போலவும், அந்த நாதமே தன்னிலிருந்தே பீறிட்டுப் பெருகிக்கொண்டிருக்கிறுற்போலவும் பட்டது.

கோவில்மணி அமுதமாய் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

அவள் சக்தியின் அனலில் பிரகாசித்தாள். அவள் அங்கமெலாம் சக்தியின் ஒளிமயமாய் மின்னிற்று. அவள் பொறிகள் ஊழித்தீயின் உள்ளடங்கிய வெம்மையில் கனிந்தன.

பறைச் சேரியின் சக்தி கொழுந்துவிட்டுப் பிரகாசித்தது.

ஊர் கூடிவிட்டது.

தன்முன்னுல் நெடும்சாண் கிடையாக விழுந்துகிடக்கும் மேல்சாதிக்காரர்களை அவள் புலன் அறிவு அறியவில்லை.

அவள் உள்ளே கிடந்த சக்தி பீறிட்டுப் பிரவகித்து பேதமற்ற உயிர்கள் சகலதிலுமே ஒன்றி நிற்பதாய் அவளுள் உணர்வுகள் பூத்து மணந்தன.

கனத்துக்குமைந்த வானம் வெடித்தது.

முத்துக்களாய் உதிர்ந்து சரம் சரமாய்த் தொங்கி நிலத்தில் சக்திவெள்ளமாய் ஒன்றின. அந்த ஒன்றலில் நிறம்இல்லை. வர்க்கம்இல்லை. எதுவுமேயில்லை.

தேவை

கைத்தறி நெசவு வேலையில் பயிற்சியுள்ள பெண்கள் தேவை. அனுபவம் குறிப்பிட்டு 10-11-65-க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1350 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1350

ஸ்ரோர் கீப்பராகக் கடமைபுரிவதற்கு அனுபவமுள்ள ஒருவர் தேவை. டிப்போசிட் பணம் ரொக்கமாக ரூபா 2000/- உடன் செலுத்தக்கூடியவர் 11-11-65-க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 1352, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1352

காணவில்லை

தராதரப் பத்திரங்களும் பிறப்புப்பத்திரமும் கொண்ட ஒரு காகிதஉறை சனிக்கிழமை மத்தியானம் பெரியகடையில் தவறிவிட்டது. இவற்றைத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானமளிக்கப்படும். ச. ப. சர்மா கோப்பாய். 1353

அகில இலங்கை பட்டினசபை சம்மேளனம்

மாவிட்டபுரம், சனி

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கைப் பட்டினசபை சம்மேளனத்தின் கூட்டத்தில், காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கிருபாமூர்த்தி உபதலைவர்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவருடன் கல்முனை பட்டினசபைத் தலைவர் திரு. அஹமட் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இக்கூட்டத்தில் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள ஐம்பது பட்டின சபைகளின் பிரதிநிதிகள், தலைவர்கள் கலந்துகொண்டனர். இந்தச் சம்மேளனத்தின் தலைவராக திரு. டயா ஜே. பஸ்குபல் தேர்ந்தெடுக்கப்பட்டார் தலைவர் உபதலைவர்களுடன் முப்பத்தைந்து உறுப்பினர்களைக்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

அ. இ. ப. சம்மேளனத்தின் உபதலைவராகத்தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. கிருபாமூர்த்தி, கடந்த இருபத்தைந்து வருடங்களாக காங்கேசன்துறை கிராமசபைபட்டினசபைகளில் அங்கத்தவராகச் சேவையாற்றி வருகிருர்.

அருமையான ....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் பழகிக்கொண்டிருக்கிருர்.

யாழ் நாடகமன்றம், ஒறியன்ற்ஸ் விளையாட்டு நுண்கலை வளர்ச்சிச் சங்கம், கலையரசு நாடக அரங்கம் முதலிய பல நாடக சபைகளில் இரத்தக் கண்ணீர், தேரோட்டி மகன், இன்ப நாள், சோக்கிறதீஸ், நெப்போலியன், மன்னிப்பு, போலி அதிகாரி, மூன்ருந் தாரம் என்று பல பல நாடகங்களில் நடித்து நாடகப் பிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். அவர் நினைப்பதெல்லாம் நாடகம், பேசுவதெல்லாம் நாடகம், செய்வதெல்லாம் நாடகம், கனவுகாண்பதெல்லாம்நாடகம்.

பள்ளிக்கூடப் படிப்பை முடித்துக்கொண்டு நாடகக் கலைக்காக தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்துகொண்டிருக்கும் இந்த வாலிபருக்கு இப்பொழுது ஒரு புதிய பைத்தியம் பிடித்திருக்கிறது.

பாலச்சந்தர், சாந்தாராம், கோபாலகிருஷ்ணன், ஸ்ரீதர் முதலிய சினிமா டைரக்டர்களின் சிருஷ்டிகளை அடிக்கடி பார்த்துப் பார்த்து, அவர்களுடைய பாணியில் ஈழத்திலே சினிமாப்படங்களைத் தயாரிக்கவேண்டும், அவை உலகப்பரிசுகள் பெறவேண்டும்-என்ற உன்னதமான லட்சியம் அவரைப் பிடித்துத் தின்கிறது.

சினிமாக்கலையிலுள்ள பல நுணுக்கங்களையும் துறைபோகக்கற்றுத்தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவா அவரை ஆட்கொண்டுவிட்டது.

எத்தனையோ இசைக் கலைஞர்களுக்கு உதவியும் ஊக்கமுமளித்து அவர்களை சினிமாத் துறையில் ஏற்றி வைத்த கலைவாணரின் வாரிசாக இன்று எம். ஜி. ராமச்சந்திரன் விளங்குகிருர். இவரிடம் சென்று சினிமாக் கலையின் நுட்பங்களை அநுபவ ரீதியாக அறியவேண்டுமென்று அருமை நாயகம் விரும்புகிருர். ஈழத்திலுள்ள பல நாடகமன்றங்கள், கலைஞர்கள், பெரியோர்கள் இவருக்கு உதவி செய்யும்படி எம். ஜி. ஆருக்கு சிபார்சு செய்திருக்கிருர்கள்.

இத்தனை உற்சாகம் படைத்த அருமைநாயகம் மிக அண்மையில் இந்தியா சென்று தமது வாழ்க்கையின் லட்சியத்தைப் பூர்த்தி செய்ய இருக்கிருர்.

ஈழத்தின் கலாரஸிகர்கள் எல்லோரினதும் நல்லாசி அவருக்குக் கிடைக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

— 'பாலா'

கிழக்கு மாகாண

கி. ச. நியமன பத்திரங்கள் தாக்கல்

திருக்கோணமலை, சனி

சாம்பல்தீவு கிராமசபையின் எட்டு வட்டாரத்தில் ஆறு வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தற்போதைய தலைவர் திரு. வி. என். தம்பிராசா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போட்டி விபரங்கள் வருமாறு: முதலாம் வட்டாரம் திரு ரி. விநாயகப்பெருமான் (போட்டியில்லை), இரண்டாம் வட்டாரம் திரு எஸ். வயிரமுத்து (போட்டியில்லை), மூன்ரும் வட்டாரம் திரு பி. இராசதுரை, திரு ஆர். தம்பிராசா. நான்காம் வட்டாரம் திரு வி. என். தம்பிராசா (போட்டியில்லை) ஐந்தாம் வட்டாரம் திரு கே. எஸ். சுப்பிரமணியம் (போட்டியில்லை), ஆறும் வட்டாரம் (போட்டியில்லை) ஏழாம் வட்டாரம் திரு எஸ். குமாரசாமி(போட்டியில்லை) எட்டாம் வட்டாரம திரு ஆர். கோபால், திரு ரி. பாக்கியராசா.

ஃ ஃ ஃ

நிலாவெளி கிராமசபையின் ஐந்தாம் வட்டாரத்திற்கு திரு. எம். சுவாம்பிள்ளை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போட்டி விபரங்கள் வருமாறு:- முதலாம் வட்டாரம் திரு எஸ். எஸ். ஹமீத், திரு. ஜே. எம். ஜெரில், திரு. எஸ். சண்முகலிங்கம், இரண்டாம் வட்டாரம் திரு என். கனகசபை, திரு பி. சிவசம்பு, மூன்ரும் வட்டாரம் திரு எஸ். ஆர். ஜோசேப், திரு வி. முத்துத்தம்பி, திரு எஸ். வேலுப்பிள்ளை நான்காம் வட்டாரம் திரு பி. எம். மஸ்தான், திரு கே. எம். சுல்தான் ஆறும்வட்டாரம் திரு பி. பெனடிற், திரு. பி. பிச்சைமுத்து, திரு எம். சபாரத்தினம்.

ஃ ஃ

உப்புவெளி கிராமசபைக்கு திரு. என். கயிலாயநாதன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். போட்டியிடுவோர் விபரம் வருமாறு:

முதலாம் வட்டாரம் திரு. என், கயிலாயநாதன் (போட்டியில்லை) இரண்டாம் வட்டாரம் திரு. சி. சிவலிங்கம், திரு. வி. தம்பு, திரு. எஸ். வடிவேலு, மூன்ரும் வட்டாரம் திரு. கே. முருகன், திரு. எம். தம்பு, நான்காம் வட்டாரம் திரு எஸ். அன்டி, திரு. என். கயிலாயநாதன், திரு. எஸ். கதிர்காமத்தம்பி, ஐந்தாம் வட்டாரம் திரு. எம். எல். பொன்சோ, திரு. பி. ஏ. சமத், ஆறும் வட்டாரம் திரு. கே. கனகதாஸ், திரு. எஸ். கந்தசாமி, திரு. ஜே. ஏ. பெரரா, திரு. கே. சந்திரசேகரம்.

ஃ ஃ ஃ

குச்சவெளிகிராமசபைக்கு இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு. கே. நாகரத்தினம் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

போட்டியிடுவோர் விபரங்கள் வருமாறு: முதலாம் வட்டாரம் திரு. கே. கண்ணுசாமி, திரு. எம். நல்லையா, மூன்ரும் வட்டாரம் திரு. கே. அப்துல்காதர், திரு. கே. அப்புசலி, திரு. எம். எஸ். அசனர், நான்காம் வட்டாரம் திரு. ஐ. மு. ஹனிபா, திரு. எஸ். எம். காசிம், ஐந்தாம் வட்டாரம் திரு. கே. ஞானநாதன், திரு. கே. பொன்னம்பலம், ஆறும் வட்டாரம் திரு. எஸ் கதிரவேலு, திரு. கே. செல்தராசா, திரு. ரி, ஆர். சோமசுந்தரம்.

அப்பீல் தள்ளுபடி

கொழும்பு, சனி

ஆர். பி. பொடி அப்புகாமியின் அப்பீல் நிராகரிக்கப்பட்டுள்ளது.

டி. விமலாவதி என்னும் இளம் பெண்ணைக் கொலை செய்ததாக மங்கள எலியர்வைச்சேர்ந்த அப்புகாமி மீது தொடரப்பட்ட வழக்கில அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இத்தண்டனையை எதிர்த்து பொடிஅப்புகாமி அப்பீல் செய்திருந்தார். நீதியரசர் திரு. ரி. எச். பெர்ணுண்டோ தலைமையிலான நீதிமன்றம் இவரது அப்பீலை தள்ளுபடி செய்துள்ளது.

திருக்கேதீச்சரத்தில்

கொழும்பு, சனி

எதிர்வரும் திருவெம்பாவை நாட்களில் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் வழமைபோல சாதனையும், திருவாசக விழாவும் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்பொழுது புராணபடனம், திருவாசக வகுப்பு, உபந்நியாசங்கள், திருவாசக பாராயணம் ஆகியன முக்கிய இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஈஸ்வர தியானத்துக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களிடம் விவேகமாகிய நெருப்பு நன்ருக எரிகிறது.

இங்ஙனமாக ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஞானமொழிகள் எம்மை நல்வழிப்படுத்துவதில் ஈடு இணை அற்றது. ஆழ்ந்த ஞானக்கருத்துக்களை சாதாரண மக்களும் தெரிந்து பயன்பெறஉதவுகின்ருர்.

(தொடரும்)

'மர்மம்' தொடருகிறது

கொழும்பு, சனி

ஒரு ஹோல்டன் காரையும் அதனுடன் ரொக்கப் பணத்தையும் பரிசாகப் பெறும் வாய்ப்பு இன்னும் எவருக்கும் கிடைக்கவில்லை, தேசிய லொத்தர்சுவீப் இல. 61-ன் முதற் பரிசை இன்னும் எவரும் கோரவில்லை. இரண்டாம் பரிசுக்குரிய டிக்கட்டும் கோரப்படவில்லை. இவை மர்மமாகவே இருந்து வருகிறது.

இது சம்பந்தமாகநாட்டின் நாலாபுறமும் 'வலை' வீசித் திரியும் பொலிஸார் பரிசு டிக்கட்மர்மத்தை இன்னும் துலக்கவில்லை.

எம்பிலியிட்டியா என்னும் கிராமத்திலிருந்து கொழும்புக்கு புறப்பட்டு வந்த ஒரு இளம் விவசாயியான ஈ. ஏ. நந்தபாலாவிட மிருந்து அதிஷ்ட (முதற்பரிசு) டிக்கட்டை யாரோ திருடிவிட்டதாகக் கூறப்படுகிறது, அவரின் வீட்டில் அன்றிரவு நித்திரைசெய்த ஒருவர் இதில் சம்பந்தப்பட்டுள்ளாராம். ஆனுலும் இதுகுறித்து எவரும் கைது செய்யப்படவில்லை.

இரண்டாம் பரிசுக்குரியடிக்கட்டை தாம் வைத்திருந்ததாகவும் தம்மிடமிருந்து அது திருட்டுப்போய் விட்டதென்றும் கொங்கடவில பொவித்கம பிறக்னரத்ன தேரோ புகார் செய்துள்ளார்.

நாடுகடத்தப்பட்டார்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவதுதடவையாகக் கைதுசெய்யப்பட்டு கடந்த ஜூன் மாதம் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டார். ஆனுல் நேற்று மூன்ருவது தடவையாகக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் திருமணமானவர். இந்தியாவில் மனைவியும் நான்கு குழந்தைகளுமுண்டு.

பொலிஸாருக்குகொடுத்த வாக்குமூலத்தில் தம்முடன் பத்துப்பேர் சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்ததாகவும் காரைநகரில் இறங்கியதாகவும் மற்றைய ஒன்பது பேர் குறித்து தமக்குத் தெரியாது என்றும் கறுப்பையா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபை

கேள்விப்பத்திர அறிவித்தல். 1966.

பருத்தித்துறை நகரசபையின் கீழ்க்குறிப்பிடப்படும் 1966-ம் ஆண்டு குத்தகைகளுக்கு 1965-ம்ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதி நண்பகல் 12-00 மணிவரையும் பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி 2-00 மணிவரை இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். பிணைப்பணமும், கேள்விப்பத்திரங்களின் நிர்ணய விலைகளும் கீழ் குறிப்பிட்டபடி செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

	பிணைப்பணம் ரூபா—சதம்.	கேள்விப்பத்திர நிர்ணயவிலை ரூபா—சதம்
காய்கறிச் சந்தை	250 — 00	25 — 00
மீன் சந்தை	150 — 00	15 — 00
மாட்டிறைச்சிக்கடை	25 — 00	5 — 00
வான், மாட்டுவண்டில் காலை	50 — 00	5 — 00
தெரு, சந்தைமுதலியவற்றில் உள்ளகுப்பை	25 — 00	5 — 00
நகரசபைக்குரியகாணிகளில்பிரயோசனங்கள்	25 — 00	5 — 00

கேள்விப் பத்திரத்திற்காகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மற்றும் குத்தகையை ஏற்றுக்கொள்ள மறுப்பவரினது பிணைப்பணமும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

3. குத்தகை ஏற்பவருக்கு அதைக் கொடுக்கவோ, அன்றி நிராகரிக்கவோ நகரசபைத்தலைவருக்குப் பூரண உரிமையுண்டு. இவைகளைப்பற்றிய முழு விபரங்களைத் தெரிய விரும்பின் காரியாலய நேரங்களில் நகரசபைக் காரியாலயத்தில் தெரிந்து கொள்ளலாம்.

நகரசபைக்காரியாலயம்,
பருத்தித்துறை,
ஐப்பசி-28-1965.

தலைவர்
ந. நடராசா
நகரசபை, பருத்தித்துறை

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம், திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.